# புதிய தேடல்

# PUTHIA THEDAL

2026

புதிய பாதையில் விடியலாய் குழித்துறை மறைமாவட்டம்

தமிழ் மாத இதழ்
Tamil Monthly Magazine





| Volume 17 | Issue 3 | March 2026 | Pages 36 | Price Rs.20/- | Annual Subscription - 200/- |
|---|---|---|---|---|---|
| மலர் 17 | இதழ் 3 | மார்ச் 2026 | பக்கம் 36 | விலை ரூ.20/- | ஆண்டு சந்தா - 200/- |

# TRINITY CENTRAL SCHOOL (CBSE)

## SENIOR SECONDARY



Affiliated to CBSE, New Delhi, Affiliation No.: 1930882
Chithirancode, Manalikarai - 629164
Kanyakumari District

**Run by RC Diocese of Kuzhithurai**

# 2026-2027

# கல்வி ஆண்டிற்கான மாணவர் சேர்க்கை நடைபெறுகிறது





## நமது பள்ளியில்



- அருமையான உள்ளம் கவரும் இயற்கை சூழல்.
- நவீனமயமாக்கப்பட்ட தொழில்நுட்பத்துடன்கூடிய விசாலமான வகுப்பறை வசதி.
- செயற்கை நுண்ணறிவு வகுப்புகள் மற்றும் ஆய்வுக் கூடங்கள்.
- நல்லெண்ணம், நம்பிக்கையோடு மாண்புற நிர்வகிக்கும் மறைமாவட்ட ஆயரின் தலைமையிலான அருட்தந்தையர்களை உள்ளடக்கிய நிர்வாகக்குழு.
- அக்கறை, அறிவு, ஆற்றல் மிகுந்த அருட்சகோதரிகளின் வழிகாட்டுதல்.
- கண்ணியமும் கடமை உணர்வும் கொண்ட ஆசிரியர்கள்.
- அனுபவமிக்க ஓட்டுநர்களுடன் கூடிய தரமான பள்ளிப்பேருந்து வசதி.
- இன்னும் புதுப்பொலிவுடனும், மனிதமாண்புடனும், புதிய கல்வித்திட்டங்களுடனும்....



**தொடர்புக்கு**
**7598193238, 9487039145**

**புதிய தேடல்**

*இது ஒரு குழித்துறை மறைமாவட்ட வெளியீடு*



*ஆசிரியர்*

அருள் முனைவர். **இரா.பால் ரிச்சார்டு ஜோசப்**

*ஆசிரியர் குழு*

அருள்பணி. **ஜா. ஜாண் ஜிஜோ** (துணைத்தலைவர்)

அருள்பணி. **பெ. வெலிங்டன்** (செயலர்)

திரு. **மு. அருளப்பன்** (துணைச் செயலர்)

அருள்பணி. **பி. ஜோஸ் பிரசாந்த்** (பொருளர்)

அருள்பணி. **ஜாக்சன்**

**குமரி ஆதவன்**

திரு. **ஜெயசிங் ராபின்சன்** (வழக்கறிஞர்)

அருள் முனைவர். **எ. ஒய்சிலின் சேவியர்**

அருள்பணி. **க. சுனில்**

திரு. **ஞா. எலியாசு**

திருமதி. **டி. மேரி விஜிலா**



*தொடர்பு முகவரி*

**புதிய தேடல்**

**ஆயர் இல்லம், உண்ணாமலைக்கடை**

**மார்த்தாண்டம், அஞ்சல் பெட்டி எண்:1**

**அஞ்சல் எண் – 629 179**

**கைபேசி : 9443693505, 8525032383**

**மின் அஞ்சல்**: newputhiathedal@gmail.com



**தனிஇதழ் : ₹ 20**

**ஆண்டு சந்தா : ₹ 200**

**ஆயுள் சந்தா : ₹ 2000**



விளம்பரக் கட்டணம்

| | |
|---|---|
| பலவண்ண அட்டை வெளிப்பக்கம் | : ₹ 12000 |
| பலவண்ண அட்டை உள்பக்கம் | : ₹ 7000 |
| முழுப்பக்கம் கறுப்பு | : ₹ 2000 |
| அரைப்பக்கம் கறுப்பு | : ₹ 1000 |




## ஆசிரியரின் அன்பு வரிகள்


அருள்முனைவர்

**இரா. பால் ரிச்சார்டு ஜோசப்**


**புதுப்பிறப்படைய புதிய தேடலின் அன்பு வாசகர்களுக்கு அன்பின் வாழ்த்துகள்...**

**"விழுந்த இலைகளுக்காய் அழுவதில்லை மரம்**
**தன்னம்பிக்கையில் மீண்டும் மீண்டும் தளிர்க்கின்றது**
**வீழ்ச்சி எங்கிருந்து வந்தால் என்ன**
**எழுச்சி நம்மிடம் தானே இருக்கின்றது"**

உயிர் ஆற்றல் என்பது மனிதனை இயக்கும் உன்னத சக்தி. மனதை உறுதிப்படுத்தி ஆரோக்கியமான சமூக நல வாழ்விற்கு நம்மை வழிநடத்தும் பேராற்றல். இறைவன் கொடுத்த வாழ்வை உயிராற்றலோடு செயல்படுத்துவது மனிதனின் மாபெரும் கடமை. அது உயிர் துடிப்போடு செயல்பட்டால் மனிதம் உயிர்க்கும் மாண்பு மலரும்.

இன்று மனிதனோ இறைவன் தனக்களித்த ஆற்றல்களை தனது சுயலாபத்திற்கும், மனித குலத்தின் அழிவிற்கும் பயன்படுத்துகிறான் என்பது சமூகத்தின் அவலம். எங்கு பார்த்தாலும் போர் மேகம், அமைதியற்ற சூழ்நிலை, குழந்தையின் அழுகுரல், அடிப்படைத் தேவைகளுக்கு பற்றாக்குறை, ஆணவம், அதிகார அடக்குமுறை, உறவை உடமையை இழந்து பரிதவிக்கும் நிலை. எங்கே நமது தவமுயற்சி? உயிரை பறிப்பதுதான் தவமா! வன்முறைதான் தானமா! அமைதியை சீரழிப்பது தான் இறைவேண்டலா! உயிர் ஆற்றலோடு, வாழ பதில் என்ன? உன்னத சாட்சிய வாழ்வே உயர்ப்பிற்கான உயிர் தேடல்.

இரும்பு எலும்புகளை உடைக்கும். அன்பு சங்கிலிகளை உடைக்கும். ஆயுதம் காயமாக்கும், அன்பே விடுதலையாக்கும். இளைஞனாய் உயிர்த்துடிப்போடு, சமூக அநீதியை வேரறுத்து தந்தையின் விருப்பத்தை நிறைவேற்ற இலட்சிய பாதைக்கு சான்றாகிறார் இறைமகன் இயேசு. கல்வாரி பாவத்தையும், மரணத்தையும் வென்று நிற்கின்றது வீரத்தில் அல்ல, தியாகத்தில்.

ஆணிக்காயங்கள் மாட்சியின் கதவுகளாகின. உயிர்த்த பின்னும் இயேசு வடுக்களை சுமந்தார் அன்பின் சாட்சியாய். கிறிஸ்து என்னும் உயிர் ஆற்றல் நம்மை புதுப்பித்து புதுவாழ்வு அளிக்கிறது. இந்த நம்பிக்கையில் அர்ப்பண உணர்வோடு நமது வாழ்விலும், பிறர் வாழ்விலும் ஒளி வீசும் தீபங்களாக சுடர் வீசுவோம். அணையா விளக்காக சான்று பகிர்வோம். உயிர் ஆற்றலாய், உன்னத சாட்சியாய் வாழ்வை கொண்டாடுவோம்.



# ஆயரின் அமுத மொழிகள்

**புத்துலகம் படைக்க புதிய தேடல்**
**வாசகர்களுக்கு அன்பின் நல்வாழ்த்துகள்!**

உயிர்ப்பு என்பது இயேசு எப்படி உயிர்த்தார் என்பதை மட்டும் விளக்கும் நிகழ்வு அல்ல; மாறாக, நாம் இயேசுவோடு இணைந்து எப்படி உயிர்த்துடிப்போடு வாழ வேண்டும் என்பதையும் உணர்த்தும் நிகழ்வாகும். உயிர்ப்பே கிறிஸ்தவத்தின் உயிர்த்துடிப்பு! காலியான கல்லறையே உயிர்ப்பின் மாபெரும் நற்செய்தி முழக்கம்! மாபெரும் துயரம் மாபெரும் மகிழ்வாய் மாறலாம் என்பதன் நம்பிக்கையே உயிர்ப்பின் செய்தி!

சிலுவையே இயேசுவின் கடைசி காட்சி என எதிரிகள் நினைத்தார்கள். ஆனால் இயேசு காலியான கல்லறை மூலமாக அடுத்த அத்தியாயத்தை துவங்கி வைத்தார். தோல்வியின் கடைசி புள்ளி என நினைத்த இடத்தில் வெற்றியின் முதல் புள்ளியை இயேசு வரைகிறார். புரட்டப்பட்ட கல் உயிர்ப்பின் நற்செய்தியை உரக்கச் சொன்ன முதல் அத்தியாயம்.

புனித வெள்ளி இயேசுவின் மாபெரும் அன்பை வெளிப்படுத்தியது போல, உயிர்ப்பு இயேசுவின் மாபெரும் ஆற்றலை வெளிப்படுத்தியது. ஒரு கல்லறை எதிர்கால நம்பிக்கையை சுமந்த வரலாற்றின் கருவறையாய் மாறிவிட்டது எந்த இருளும் பூட்ட முடியாத இடத்தில் இருந்து வெளிச்சத்தின் கதிர்கள் வெளியேறி நடந்தன.

பிறர்பால் ஊற்றெடுக்கும் கைமாறு கருதாத உண்மையான அன்பு, அடுத்தவர் துன்பம் தீர்க்கத் துடிக்கும் அருள் கருணை, பகைவரிடத்தும் வெறுப்பின் நிழல் படியாத பாசம், தன்னுயிர் போல் எல்லா உயிர்களையும் பாவிக்கும் பண்பு நலன், போர் பிளவு இல்லாத அமைதியான வாழ்க்கை முறை இவற்றின் கூட்டுறவில் பிறப்பதே உண்மையான உயிர்ப்பு செய்தியாகும். உன்னத சாட்சியாய் உயிர் ஆற்றலோடு உயிர்ப்பை எதிர்கொள்வோம். நம்பிக்கை வாழ்விற்கு சான்று பகிர்வோம்.

கிறிஸ்துவில் உங்கள் அன்புள்ள,

+ A. Albert

மேதகு ஆயர் **ஆல்பர்ட் G.A. அனஸ்தாஸ்**,
குழித்துறை மறைமாவட்டம்.

இதழ் 03 மலர் 17 மார்ச் 2026

*என்* *படைப்பு*

1. ஆசிரியரின் அன்பு வரிகள்
2. ஆயரின் அமுத மொழிகள்
3. கல்லறையை உடைக்கும் இலட்சிய விதைகள்
4. நீதியும் உண்மையும் உயிர்த்தெழ வேண்டும் நம்பிக்கை தீபங்கள் ஒளிசிந்த வேண்டும்.
5. சிலுவை தியாகத்தின் குறியீடு
6. இயேசுவின் இலட்சிய பயணம்
7. பாரம்பரியமும் இழந்தவைகளும்
8. அறிவுலக ஆசான் அம்பேத்கார்
9. வருமுன் காப்போம்
10. ஜாலியன் வாலா பாக் குருதியின் கறை
11. வானியல் தகவல்களை தீவிரமாக அனுகுவோம்
12. நீர் வளம் இன்றைய தேவை, நாளைய வாழ்வு
13. பணிக்குழுக்களின் சிறப்பு செயல்பாட்டு அறிக்கைகள்
16. ஆயரின் அலுவல்கள்



# கல்லறையை உடைக்கும் இலட்சிய விதைகள்

**Rev. Dr. ச. சேவியர் பெனடிக்ட், DCL.**
(மறைமாவட்ட முதன்மைப் பணியாளர், குழித்துறை மறைமாவட்டம்).

மனித வரலாற்றில் ஒளிக்கும் இருளுக்கும் இடையேயான போராட்டம் என்பது தொடர் நிகழ்வு. இறுதியில் இருள்தான் வெற்றி பெறுகின்றது என்ற ஒரு மாயை, நம் மனஉறுதியை நிலைகுலையச் செய்யும் தருணங்கள் வாழ்வில் வருவது உண்டு. உண்மை அதற்கு மாறானது. சில இலட்சிய மனிதர்கள் சமூக விரோதிகள் கட்டுகின்ற கல்லறைகளை உடைத்து இலட்சியங்களுக்கு மரணமில்லை என்ற உண்மையை உணர்த்தியிருக்கின்றார்கள். இவர்களது உயிர்ப்பு சமூகத்தில் தொடர் மாற்றங்களை தொடர்ந்து நிகழ்த்திக் கொண்டிருக்கிறது.

## இறந்தும் வாழ்கின்றவர்கள்

தனது சொந்த நலனை விடுத்து சமூக நீதிக்காகவும், மக்கள் நலனிற்காகவும் வாழ்ந்தவர்கள் விதைத்த இலட்சியங்கள் மனித குலத்தை கட்டிப்போடும் அடிமைத்தனத்தின் சங்கிலிகளை உடைக்கும் சக்திகளாக முளைக்கின்றது. மகாத்மா காந்தி விதைத்த அகிம்சை போராட்ட முறை உலகமெங்கும் உள்ள சமூக மாற்ற இயக்கங்களுக்கு ஒரு புதிய உத்வேகத்தை தந்தது. பிரெஞ்சு புரட்சியின்போது விதைக்கப்பட்ட சுதந்திரம், சமத்துவம், சகோதரத்தவம் என்னும் கொள்கைகள் ஒரு மாற்று ஐரோப்பிய தேசத்தை கட்டமைத்தது. டாக்டர் அம்பேத்கார், பெரியார் மார்டின் லூதர்கிங், அன்னை தெரசா ஆகியோர் விதைத்த வாழ்வியல் விழுமியங்கள் அவர்களின் மரணத்தோடு அழிந்து விடவில்லை. ஆயிரக்கணக்கான புதிய இயக்கங்கள் வழியாக இன்றும் சமூக மாற்றத்தின் சக்திகளாக உயிர்த்து நிற்கின்றன.

## இயேசுவின் இறையாட்சி விதைகள்

இயேசு தன் சமூகப்பணியை துவங்கும்போது இறையாட்சி அண்மையில் உள்ளது. மனந்திரும்புங்கள் என்று அறைகூவல் விடுத்தார். மனம் திரும்பி இயேசுவின்மீது நம்பிக்கைக் கொள்ளும் எல்லா இனத்தவரும் (மத் 8:11), பாவிகள் என்று ஒதுக்கப்பட்ட வரிதண்டுவோரும், விலைமாதரும் கூட (மத் 21:31) இறையாட்சியின் அங்கமாக இருப்பர் என்று அறிவுறுத்தினார். மேலும் ஏழைகள், உடல் ஊனமுற்றோர், பார்வையற்றோர், கால் ஊனமுற்றோர் ஆகிய மாற்றுத்திறன் கொண்டோரும், வீடின்றி தெருவில் வாழ்வோரும் இறையாட்சி சமூகத்தில் இணைக்கப்படுவர் (லூக் 14:21-23) என்று உவமைகள் வழியாக அறிவுறுத்தினார். சமூகம் ஒதுக்கியவர்களை, ஆலயத்தில் நுழையவோ, பலி செலுத்தவோ தகுதியற்றவர்கள் என்று முத்திரைக்குத்தியவர்களை (லேவி 21:18-20), தொட்டால் தீட்டு என்று தூர விலக்கியவர்களை, இறையாட்சி சமூகத்தின் மைய உறுப்பினர்கள் என அடையாளப்படுத்தி மாற்று விழுமியத்தை இயேசு முன்வைத்தார். இது ஏற்கெனவே கட்டிக்காக்கப்பட்ட உயர்ந்தவர் - தாழ்ந்தவர், அடிமைகள் - உரிமை குடிமக்கள், சுத்தமானவர்கள் - தீட்டுப்பட்டவர்கள் என்ற சமூகத்தின் படிமுறை அமைப்பு கல்லறையை உடைத்தது.

ஆட்சி அதிகாரம் குறித்த புரிதலையும் இயேசு மாற்றியமைத்தார். அடக்கி ஆள்வதற்கு அல்ல அதிகாரம், தொண்டனாகப் பணிபுரியவே

அதிகாரம். யார் உயர்ந்தவன்? பந்தியில் அமர்பவன் அல்ல பணிவிடை புரிபவன்தான் உயர்ந்தவன். இது அதிகாரத்தில் இருக்கின்றவர்களை குறிவைத்து தாக்கும் அம்புகளாக அமைந்தது.

## இயேசு ஏன் கொலை செய்யப்பட்டார்?

அன்பை போதித்ததாலோ, நோயாளிகளை குணமாக்கியதாலோ, பெரும் கூட்டம் இயேசுவை பின்தொடர்ந்ததாலோ அவர் கொலை செய்யப்படவில்லை. இறையாட்சி அமைய வேண்டும் என்று மாற்று ஆட்சியைப் போதித்ததாலும், அதற்கான விழுமியங்களை விதைத்ததாலும் அவர் கொலை செய்யப்பட்டார் என்பதே உண்மை. இயேசு கற்றுத்தந்த ஜெபம்கூட ஒரு மாற்று ஆட்சியை இம்மண்ணில் கொணர வேண்டும் என்று வலியுறுத்துகின்றது. "**உமது ஆட்சி வருக உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவதுபோல மண்ணுலகிலும் நிறைவேறுக**" (மத் 6: 10) என்ற வார்த்தைகள் இவ்வுலகில் இறையாட்சி சமூகம் நிறுவப்பட வேண்டும் என்பதை உறுதி செய்கின்றது. மண்ணுலக அரசர்களின் ஆட்சிக்கு மாற்றான இறையாட்சி கருத்துக்களை பெருவாரியான மக்கள் ஏற்றுக்கொண்டு விட்டார்களோ என்ற அச்சமே, இயேசுவை எப்படியாவது கொன்றுவிட வேண்டும் என்ற ஒற்றை திட்டத்தில் ஏரோதியர்களும், உரோமையர்களும், பரிசேயர்களும் இணைய காரணமானது.



மக்கள் இயேசுவை அரசராக்க வேண்டும் என்று துடித்தார்கள். சீடர்கள், இயேசு ஆட்சி உரிமையுடன் வரும் பொழுது வலப்பக்கம் யார் அமர்வது இடப்பக்கம் யார் அமர்வது என்று போட்டிப்போட்டார்கள். ஏரோது மன்னனின் படைவீரர்கள் இயேசுவுக்கு சிவப்பு அங்கி அணிவித்து, முள்முடி சூட்டி, காரி முகத்தில் உமிழ்ந்து "**யூதரின் அரசே வாழ்க**" (யோவான் 19:3) என்று பரிகசித்தனர். பிலாத்து விசாரணையின்போது "***நீ யூதரின் அரசனா?***" (லூக் 23:3) என்று கேள்வி கேட்கின்றான். சிலுவையில் அறையப்பட்டபின் சிலுவைமீது வைக்கப்பட்ட அறிக்கையில் "**நாசரேத்து இயேசு யூதர்களின் அரசன்**" (யோவான் 19:19) என்று எழுதப்பட்டிருந்தது. தாவீதின் மகனுக்கு ஓசன்னா பாடிய பாதிக்கப்பட்ட மக்களோடு இணைந்து புதிய வாழ்வியல் நெறிமுறைகளை உள்ளடக்கிய இறையாட்சியை இயேசு அமைத்துவிடுவாரோ என்ற அச்சம்தான் இயேசுவை கழுமரம் ஏற்றியது.

## உள்நோக்கியப் பார்வை

பொதுவாக நமது பார்வை வெளிநோக்கியதாக அமையும். அடுத்தவர்கள் என்ன தவறு செய்தார்கள்? எப்படி சமூகத்தை சீரழித்தார்கள்? ஏன் தவறான பாதையை காட்டினார்கள்? என்ற வெளிப்புற ஆய்வுகளை மாற்றத்திற்கான தேவைகளாக முன்னெடுக்கின்றோம். அது தேவையான ஒன்று. அதற்குமுன் நாம் உள்நோக்கிச் சென்று மாற்றங்களை ஏற்கும் மனநிலையை உருவாக்குவதும், அதில் வரும் சவால்களை எதிர்கொள்ளும் மன ஆற்றலை வளர்த்துக் கொள்வதும், மாற்றத்தை பரவலாக்கம் செய்ய தளராமல் போராடும் துணிவை தனதாக்கிக் கொள்வதும் மிகமிக அடிப்படையானது. இயேசு 40 நாட்கள் பாலைவனத்தில் செய்த தவம் உள்நோக்கிய பயணம். "அப்பா" அனுபவத்தால் இலட்சியத் தெளிவுப் பெற்றார்; தன்னை ஒறுத்து ஐம்புலன்களை வென்றார்; அலகையின் சோதனைக்கு எதிராக துணிந்துநின்று போராடும் உறுதியைப்

பெற்றார். அதன்பின் வெளியுலகை புதுப்பிக்க முயன்றார்.

## திருஅவையின் உள்நோக்கியப் பார்வை

இரண்டாம் வத்திக்கான் சங்கம் கூட்டப்படுவதற்குமுன் திருஅவையில் சுமார் 20 பொதுச் சங்கங்கள் கூட்டப்பட்டன. அதன் நோக்கங்கள் வெளியிலிருந்து வீசப்பட்ட திருஅவை கொள்கைக்கு எதிரான கொள்கைகளை கண்டித்துத் திருத்தி, சரியானப் படிப்பினைகளைத் தருவதாக இருந்தது. ஆனால், திருத்தந்தை 23-ஆம் யோவான் "**புதிய காற்றைச் சுவாசிகக ஜன்னல்களை திறப்போம்**" என்று கூறி பிறரிடம் உள்ள குறைகளை சுட்டிக்காட்டுவதை தவிர்த்து, திருஅவையில் உள்ள குறைகளை ஆய்வு செய்யவும், இடத்தின், காலத்தின் சூழலுக்கு ஏற்ற அர்த்தமுள்ள பணிகளை முன்னெடுக்கும் வகையில் திருஅவை தன்னையும் தன் பார்வையையும், பணியையும் புதுப்பிக்கவும் அழைப்பு விடுத்தார். அதன்விளைவு திருஅவை என்பது திருநிலையினரின் ஆதிக்கத்திற்கு உட்பட்டது என்ற கல்லறை உடைக்கப்பட்டு இறைமக்கள் இணைந்த இயக்கமே பொதுநிலையினர் இன்றி திருஅவை இல்லை என்ற புதிய புரிதலுடன் அனைவரையும் இணைத்துக்கொண்டு பயணிக்கும் திருஅவையாக பரிணமித்தது. மாற்றுக் கருத்து உடையவர்களை எதிர்த்துப் போராடுவதை விடுத்து உரையாடி உறவை உருவாக்க திருஅவை முன்வந்தது. திருத்தந்தை 23-ஆம் யோவானின் இலட்சிய விதைகள் இன்றும் திருஅவையை புதுப்பித்துக் கொண்டிருக்கிறது.

## இயேசுவை மீண்டும் மீண்டும் சந்திப்போம்

அருள்பணி. தே. அல்போன்சு தனது வானம் மண்ணிலே! தெய்வம் கண்ணிலே! என்ற நூலில் இயேசுவின் உயிர்ப்பை இலட்சியங்களின் உயிர்ப்பு என்றோ அல்லது சீடர்களின் உள்ளங்களில் ஏற்பட்ட நம்பிக்கை உயிர்ப்பு என்றோ குறுக்கிவிடக் கூடாது. மாறாக, வரம்புள்ள இவ்வுலகிலிருந்து வரம்பற்ற இறையுலகின் நிறைவிற்கு அவர் உயிர்த்தார் என்று கூறுகின்றார். அந்த இயேசுவை சீடர்கள் மீண்டும் மீண்டும் சந்தித்தனர். அந்த சந்திப்பு சீடர்களின் ஆளுமையில் பெரிய மாற்றங்களை ஏற்படுத்தியது. உயிர்ப்பின் உண்மையை அறிவிக்க கடல் கடந்து பயணம் செய்தனர். இன்னல்களை, துன்பங்களை, தாங்கிக் கொண்டனர். இயேசுவின் சாட்சிகளாக உயிரையும் கொடுத்தனர்.

அடிமைத்தளையின் கல்லறைகளை உடைத்து உயிர்த்த இயேசுவை சந்தித்த அனுபவம் பெற்றவர்களால் இந்த உலகம் பெரும் மாற்றங்களைக் கண்டது. அவர்கள் தம்மை பகைத்து துன்புறுத்தியோருக்கு அன்பு காட்டினர். அநீதி உள்ள இடத்தில் இழப்புக்களை பொருட்படுத்தாமல் நீதிக்காக உரத்தக் குரல் கொடுத்தனர். குழப்பங்கள் நடுவில் நீதியின் அடிப்படையிலான அமைதியை ஏற்படுத்த உழைத்தனர். உழைப்புச் சுரண்டலுக்கு எதிராக குரல் கொடுத்தனர். இறையாட்சி அமைக்க இயேசுவின் சீடர்களாக செயல்பட்டனர். நாமும் உயிர்த்த இயேசுவை மீண்டும் மீண்டும் சந்திப்போம். அன்பிற்கும் நீதிக்கும் உண்மைக்கும் சான்று பகர ஆற்றல் பெறுவோம். இயேசுவின் கனவு நனவாகும்வரை நம்பிக்கையோடும் ஆற்றலோடும் செயல்படுவோம்.





# நீதியும் உண்மையும் உயிர்த்தெழவேண்டும் நம்பிக்கை தீபங்கள் ஒளிசிந்த வேண்டும்

அருள்முனைவர் **ம. டேவிட்மைக்கேல்**

தெய்வீகத்தின் மானிட மொழி பெயர்ப்பான இயேசு, தன் வாழ்வாலும் பணியாலும் இறையாட்சியின் இயல்பையும் இருப்பையும் வெளிப்படுத்தினார். உலகின் போக்கை மாற்றிட மாற்று வழிகளை அறிமுகம் செய்தார். அவரால் ஈர்க்கப்பட்டவர்கள் அவரோடு பயணித்தார்கள். அவர்களில் சிலரை சீடர்களாக அமர்த்திக் கொண்டு இறையாட்சி அமைத்திடும் வேள்வியில் சமூகப் புனரமைப்புப் பணிகளில் ஈடுபட்டார். பாழ்வெளியில் ஆயிரக்கணக்கானோருக்கு உணவளித்த போதும், நோயாளிகளைக் குணப்படுத்திய போதும், வியத்தகு செயல்களை நிகழ்த்திய போதும் அந்தி வானத்து ஒளிக் கீற்றால் உச்சி முகந்து வாழ்த்தினார்கள். சமூகச் சீரமைப்பை இலக்காகக் கொண்டு மரபுகளை உடைத்தபோது, மனிதர்களை அழுத்தும் சுமையானச் சட்டங்களை மீறிய போது, சமயத்தைக் கவசமாகக் கொண்டு கடவுளின் பெயரால் மக்களை வஞ்சித்தவர்களின் முகத்திரைகளைக் கிழித்தபோது, அதிகாரத்தையும் மரபுகளையும் கட்டிக்காத்து மனிதர்களைக் காலங்காலமாக கட்டுக்குள் வைத்திருந்த கூட்டத்திற்கு ஆத்திரம் அத்துமீறி வந்தது. தம் அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்திக் கொண்ட அதிகாரக் கூட்டம் இயேசுவை ஒழித்திட வழிதேடினர்.

இயேசுவைப் பின்தொடர்ந்த கூட்டம் அதிகார பலமோ சமூக வலுவோ கொண்ட கூட்டமில்லை என்பதால் எதிராளிகளுக்கு அஞ்சி தம் உயிரைக் காத்துக் கொள்ளும் நோக்கில் மூட்டை அவிழ்ந்த நெல்லிக்காய்கள் போல இயேசுவை விட்டுவிட்டுச் சிதறி ஓடினர். தனிமரமான இயேசு சிலுவை மரத்தீர்ப்புக்கு பலியானார். அவரது சாவோடு அவரது சரித்திரம் முடிந்தது என்று அவரை வீழ்த்தியவர்கள் விழாக் கொண்டாடினர். சிதறி ஓடிய இயேசுவின் அனுதாபிகளும் எல்லாம் முடிந்தது எனும் எண்ணத்திற்கே வந்தார்கள்.

இச்சூழலிலே, இயேசுவின் உயிர்த்தெழுதல் நிகழ்வு எல்லாவற்றையும் புரட்டிப் போட்டுவிட்டது. கல்லறை பிளந்து இயேசு எழுந்த போது மாபெரும் மாற்றம் பூமியைச் சூழ்ந்தது. இயேசுவின் கதை முடிந்தது என எக்காளம் ஊதியவர்கள் வாயடைத்து நின்றார்கள். இயேசுவைப் பின்தொடர்ந்து அவரோடு பயணித்து பாடுகளைக் கண்டும் பரிதாபக் கொலையைக் கண்டும் ஓடி ஒளிந்த இயேசுவின் சீடர்களும் நலம் விரும்பிகளும் மீண்டும் ஒன்றாய் கூடினார்கள். புத்தெழுச்சி பெற்றவர்களாய் வலிமையோடு இயேசுவின் மீட்புச் செய்தியை வீதிகளில் நின்று அச்சமின்றி முழங்கினார்கள். புதிய நம்பிக்கை பிறந்ததால் மீண்டெழுந்து புதுவாழ்வின் சமூகமாய் கூடி மகிழ்ந்தார்கள். நீதியும் உண்மையும் ஒருநாளும் சாகாது என்று சத்தியத்துக்குச் சாட்சி சொல்ல இயேசுவின் உயிர்த்தெழுதல் அவர்களுக்கு வலுவூட்டியது. பொய்மையும் போலிகளும் உண்மையின் நெருப்பில் சாம்பலாகும் எனும் உலகநீதி இயேசுவின் உயிர்த்தெழுதலால் ஊர்ஜிதப்படுத்தப்பட்டது. இயேசுவின் உயிர்த்தெழுதல் நிகழ்ந்திராவிடில் நமது நம்பிக்கை வீணாகியிருக்கும் எனும் பவுலடியாரின் வார்த்தைகளில் எத்துணை

யதார்த்தம் இடம் பிடித்திருக்கிறது! '**உண்மைக்குக் காலமில்லை; நீதிக்குப் பொருளுமில்லை**' என நம்பிக்கையைத் தொலைத்துவிட்டு அநாதையானவர்கள் இயேசுவின் உயிர்த்தெழுதல் எனும் வரலாற்று வசந்தத்திற்குப் பிறகு தங்களின் வாழ்வியலை மாற்றிக் கொண்டார்கள். கருத்தியல் மாற்றம் கருவிலே உருவானது. அவநம்பிக்கை விலக்கி நம்பிக்கையோடு நடந்தார்கள். இயேசுவின் உயிர்த்தெழுதலால் நீதியும் உண்மையும் உலகில் உயிர்த்தெழும் என்கிற உயரிய வேதத்தை பிசிறில்லாமல் பிரபஞ்சம் எங்கும் பிரகடனப்படுத்தினர்.

ஆண்டுதோறும் இயேசுவின் உயிர்த்தெழுதல் நிகழ்வைப் பண்டிகையாகக் கொண்டாடி ஆலய வழிபாடுகளோடு முடித்துக் கொள்கிறோம். இது ஆண்டுதோறும் அனிச்சைச் செயலாகவே நடந்து முடிந்து விடுகிறது. உயிர்த்தெழுதல் உணர்த்திக் காட்டும் வாழ்வியல் விழுமியங்கள் உயிர்த்தெழ வேண்டும் என்பதே இயேசுவில் நம்பிக்கைக் கொண்டோரின் ஆதங்கமாக அமைய வேண்டும். இயேசுவின் பாடுகள், மரணத்தைப் போன்ற சூழலே இன்றைய உலகத்தில் நிகழ்ந்து வருகின்றன.

உயிர்த்தெழுதல் நிகழாமலே வறியோரும் எளியோரும் நீதியும் உண்மையும் புதையுண்டு போகுமோ என நம்பிக்கையிழந்து நிற்கின்றனர். உலக நடப்புகள் தொடங்கி உள்ளூர் கிடப்புகள் வரை நீதி, நேர்மை, உண்மை, சமத்துவம், சகோதரத்துவம் யாவும் குழியில் புதையுண்டு கிடக்கின்றன. சாதாரண மக்கள் நம்பிக்கை இழந்து உண்மை உயிர்த்தெழாதோ என்று வெதும்பி நிற்கின்ற காட்சியை நிதமும் காண்கின்றோம்.

உலகில் திரும்புகிற திசையெங்கும் போர் முழக்கங்கள்! ரஷ்யா - உக்ரேன் இடையே தொடங்கிய யுத்தம் வருடங்களைக் கடந்து வளர்ந்து கொண்டிருக்கிறது. ஆப்பிரிக்க நிலத்தில் உள்ளூர் சண்டைகள் ஓயவில்லை. அரசியல் லாபங்களுக்காக பாகிஸ்தானோடு மல்லுக்கட்டுவது தீவிரவாதிகளை வேட்டையாடுதல் என்ற போர்வையில் அப்பாவி குடிமக்களைக் கொன்று விட்டு தீவிரவாதத்தை வேரறுத்து விட்டோமென வெற்று முழக்கங்களை எழுப்பி அன்றாட வாழ்வுக்கே அல்லல்படும் இந்திய ஒன்றியக் குடிகளை உசுப்பேற்றி தேர்தல் காலத்தில் வாக்குகளை அறுவடை செய்யும் குரூர உத்திகள் இந்திய அரசியல்வாதிகளை ஆக்கிரமித்துள்ளன. உச்சமாக அமெரிக்காவும் இஸ்ரேலும் கூட்டுச் சேர்ந்து ஈரான் மீது குண்டுவீசி நாசம்



செய்வதோடு மேற்கு ஆசியாவை சீரழிக்கும் கொடுமையை செய்து வருகின்றன. தங்கள் படைபலத்தால் உலக நாடுகளை தங்களின் கட்டுக்குள் வைத்துக் கொள்ள முதலாளித்துவ நாடுகள் முயன்று வருகின்றன.

உலக நாடுகளுக்கிடையே ஆயுத மோதல் அதிகரித்து வருகிறதென்றால் உள்ளூர் நிலவரமோ கவலைக்கிடமாக உள்ளது. இயேசுவின் பெயரால் இயங்குகிற உள்ளூர் இறைச்சமூகங்களில் உலகப் போர்களின் விதைகளே விரிந்து கிடக்கின்றன.

அதிகாரத்தையும் பணத்தையும் வசப்படுத்திக் கொள்ள பங்குகளில் நடக்கும் காட்சிகளை நாடே பார்த்துக் கொண்டிருக்கிறது. பங்குப்பேரவையில் இடம்பெற்று பங்குப் பணிகளில் அர்ப்பணிப்போடு உழைப்போம் எனும் வேட்கையிலா பங்குப் பேரவைத் தேர்தல் நடைபெறுகிறது? அதிகாரப் போட்டியை அரங்கேற்றும் தளமாக சில இடங்களில் வெளிப்படுகிறது. '**எல்லோரும் ஒன்றாய் இருப்பார்களாக**' எனக் கனவு வளர்த்த இயேசுவின் திரு அவைகளில் கோஷ்டி மோதல்கள் தலையெடுக்கின்றன. வறியோரும் நலிந்தோரும் ஆலயத் திருப்பலியில் பார்வையாளர்களாக அமர்வதுபோலவே அதிகாரங்களிலும் பொறுப்புக்களிலும் பங்கேற்க முடியாமல் பார்வையாளர்களாகவே இருந்து விடுகின்றனர். அதிகாரத்தைக் கைப்பற்றும் அழுக்குப் போட்டிகளில் எத்தனை கைகலப்புகள்... மண்டை உடைப்புக்கள் அவ்வப்போது அரங்கேறுகின்றன! இறைச்சமூகங்கள் இறையாட்சிப் பாசறைகளாக உருவாவதை விட்டுவிட்டு சுய உதவிக்குழுக்களாக, வட்டிக்கடை வர்த்தகர்களாக, கல்வி வியாபாரிகளாக மாறி தீர்வுகள் தேடி காவல் நிலையங்களிலும் நீதிமன்றங்களிலும் கைகட்டி நிற்பதைக் கண்டு பிறர் கைதட்டி சிரிக்கின்றனர். சந்தி சிரிக்கும் இத்தகைய நிலைகளைப் பார்க்கும் போது நீதியும் உண்மையும் நிரந்தரமாய் சவக்குழியில் கிடக்கிறதோ என எண்ணத் தோன்றுகிறது. இவை என்றைக்கு உயிர்த்தெழும் என்று சாதாரண மக்கள் ஏக்கத்தோடு எதிர்நோக்கியிருக்கிறார்கள்.

ஏழைகளுக்கு நீதி எட்டாக் கனியாக உள்ளது. வாய்மை வெல்லும் எனும் வார்த்தை வாக்குறுதி செல்லா நிலையில் இருக்கிறது. சமூக நடப்புகளைக் காணும்போது கொஞ்ச நஞ்சம் இருக்கிற நம்பிக்கைகளும் நலிந்து போய்விடுகின்றன. இயேசுவின் உயிர்த்தெழுதல் இயேசுவின் சீடர்களுக்கும் இயேசுவை நம்பிய மக்களுக்கும் புதுவாழ்வையும் புத்தெழுச்சியையும் தந்தது. இன்று அதே இயேசுவைப் பின்தொடரும் திரு அவையின் மக்களுக்கு இயேசுவின் உயிர்த்தெழுதல் புதுவாழ்வையும் புத்தெழுச்சியையும் தரவேண்டும். '**வஞ்சிக்கப்படுவோரின் கடைசி**



**நம்பிக்கை சமயம்**' என்று கடவுள் நம்பிக்கை இல்லா சமூகப் புரட்சியாளர் காரல் மார்க்ஸ் குறிப்பிட்டார். சமயத் தளத்தில் இயங்கி இறையாட்சிப் பணியை முன்னெடுக்கும் திரு அவையின் மக்கள் உண்மையையும் நீதியையும் உயிர்த்தெழச் செய்ய வேண்டும். இதன் மூலம் அவநம்பிக்கைகள் அகன்று வறியோரும் நம்பிக்கை கொள்ளும் நிலை வரவேண்டும். '**தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும்**' என்று முடித்து விடாமல் வாய்மை வெல்லும் என்கிற நம்பிக்கையின் வாக்குறுதி உயிர்த்தெழ வேண்டும். மதவெறியும் கபட நாடகமும் அதிக நாட்களுக்கு கை கொடுக்காது என்னும் ஆரோக்கிய சிந்தனை உயிர்த்தெழ வேண்டும். பொல்லாங்கு செய்வோர் பல்லாண்டுகளுக்கு நீடிக்க முடியாது என்னும் நிலைகள் உயிர்த்தெழ வேண்டும். எல்லா ராத்திரிகளும் விடிகின்றன எனும் எதார்த்த இயல்பு நிலை வாழ்க்கைக்கும் பொருந்தி நீதியின் கதிரவன் உதித்தெழவும் உயிர்த்தெழவும் வேண்டும்.



# சிலுவை
# தியாகத்தின் குறியீடு

அருள்பணி. **வ. இரபேல்**

கிறிஸ்தவ நம்பிக்கையின் இதயமாகவே சிலுவை உள்ளது. கிறிஸ்தவர் கோவில் ஒவ்வொன்றிலும், இல்லங்களிலும், நம் கழுத்திலும் சிலுவை இடம்பிடித்து, மானிட இனத்திற்கு வெளிப்படுத்தப்பட்ட மிகப்பெரும் அன்பை நினைவூட்டுகின்றது. கிறிஸ்தவர்களுக்குச் சிலுவை என்பது வெறுமனே சமய அடையாளமன்று; அது வெறுமனே ஓர் அலங்காரப் பொருளன்று; அது தியாகம், மீட்பு, அன்பு ஆகியவற்றின் வல்லமையுள்ள அடையாளம். உலகின் மீட்புக்காகத் தம்மை முழுவதும் கையளித்த இயேசு கிறிஸ்துவைச் சிலுவை பேசுகிறது.

உரோமைப் பேரரசு காலத்தில் சிலுவை துன்புறுத்தல் மற்றும் மரணதண்டனைக்கான கருவியாக இருந்தது. பெரும் குற்றவாளிகளுக்கும், தேச ஏரோதிகளுக்கும் சிலுவைத் தண்டனை கொடுக்கப்பட்டு வந்தது. சிலுவையில் அறைந்து கொல்லப்படுதல் என்பது தாங்கவொண்ணா துன்பத்தையும் அவமானத்தையும் தந்தது. சிலுவையை யாரும் மரியாதையுடன் நோக்கியதில்லை. இருப்பினும், இயேசு கிறிஸ்துவின் பிறப்பு மற்றும் பாடுகளினால் சிலுவையின் பொருள் முற்றிலும் மாறிவிட்டது

இயேசு கல்வாரியில் சிலுவையில் அறையப்பட்டபோது, வரலாற்றில் தோல்வி என்பது வெற்றியாக மாற்றம் கண்டது. சிலுவையில் இயேசு துன்பத்தையும் சாவையும் ஏற்றுக்கொண்டதன் வழியாக, மானிட இனத்தின்மீது கடவுள் கொண்டுள்ள அன்பை வெளிப்படுத்தினார். ஏனெனில் "**தம் ஒரே மகன்மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும் பொருட்டு, அந்த மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவும் உலகின்மேல் அன்புகூர்ந்தார்**" (யோன. 3.16) இதனால்தான், சிலுவை தியாகமிகு அன்பின் மிக உன்னதமான குறியீடாக மாறிவிட்டது.

இயேசு சிலுவையை விருப்புடன் ஏற்றுக்கொண்டார். தமது சிலுவைத் துன்பம் உலகிற்கு மீட்பைக் கொண்டுவரும் என்பதை



இயேசு அறிந்திருந்தார். '**என் உயிரை என்னிடமிருந்து யாரும் பறித்துக் கொள்வதில்லை; நானாகவே அதைக் கொடுக்கிறேன்**' (யோவா. 10:18) என்று இயேசு

மொழிந்தார். அவர் மேற்கொண்ட தியாகப் பலி யாராலும் அவரிடம் திணிக்கப்படவில்லை. அது அன்பினால் சுதந்திரமாக ஒப்புக்கொடுக்கப்பட்டது ஆகும். சிலுவையில் இயேசு மானிடரின் பாவங்களைச் சுமந்து, கடவுளுடன் மனிதர் ஒப்புரவு ஆவதற்கான வழியைத் திறந்து வைத்தார்.

திருத்தந்தை புனித இரண்டாம் ஜான்பால் இந்த மறைபொருளைக் குறித்து எழுதுகையில் "**கிறிஸ்துவின் சிலுவையில் மீட்பு என்பது துன்பத்தின் வழியாக நிறைவேற்றம் அடைவது மட்டுமல்லாமல், மானிடத் துன்பமும் மீட்படைகிறது**" எனக் குறிப்பிடுகிறார். தம் பாடுகள் வழியாக இயேசு மானிடத் துன்பத்திற்குப் பொருள் கொடுக்கிறார். அத்துடன் அத்துன்பத்தை அருள் மற்றும் மீட்பின் பாதையில் திசைதிருப்பி விடுகிறார்.

கிறிஸ்தவர்களாகிய தமக்குச் சிலுவை என்பது சீடத்துவ வாழ்க்கைக்கான அழைப்பாக உள்ளது. தம்மைப் பின்பற்றும் சீடர்கள் சிலுவை சுமப்பதில் தம்முடன் பங்கெடுக்குமாறு இயேசு அழைப்பு விடுக்கிறார்: "**என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும், தன்னலம் துறந்து, தம் சிலுவையைத் தூக்கிக்கொண்டு என்னைப் பின்பற்றட்டும்**" என இயேசு உரைக்கிறார். (மத். 16:24). சிலுவையைத் தூக்கிக்கொண்டு நடத்தல் என்பது, அன்றாட வாழ்வில் தியாகச் செயல்களை நம்பிக்கையிலும் அன்பிலும் ஏற்றுக்கொள்ளுதல் ஆகும்.

தம் அன்றாட வாழ்வில் சிலுவை என்பது பல வடிவங்களில் தோன்றுகிறது. பெற்றோர் தங்கள் நலனைத் தங்கள் பிள்ளைகளுக்காகத் தியாகம் செய்கின்றார்கள். அருள்பணியாளர்கள் இறைமக்களுக்காகத் தங்கள் வாழ்வை அர்ப்பணிக்கின்றார்கள் துறவறச் சகோதரியர் நோயுற்றோர். ஏழையர், கைவிடப்பட்டோர் முதியோருக்குப் பணி செய்கின்றனர். ஆசிரியர்கள் பொறுமையுடனும் அர்ப்பணிப்புடனும் இளவயதினரைப் பண்படுத்துகின்றார்கள். இத்தகு தாராளமயமான செயல்பாடுகள் சிலுவையின் பொருளைப் பிரதிபலிக்கின்றன.

ஏழையரிலும் ஏழையருக்காகத் தொண்டாற்றிய புனித அன்னை தெரேசா ஒருமுறை சொன்னார்: "**உண்மையில் அன்பு நம்மைக் காயப்படுத்த வேண்டும்**" உண்மையான அன்பு தியாகத்தை உள்ளடக்கியது என்பதை அன்னை தெரேசாவின் சொற்கள் நமக்கு உணர்த்துகின்றன. உண்மையான அன்பு என்பது வெறுமனே ஓர் உணர்வு மட்டுமன்று; அது ஒருவர் வழங்குதல் என்பதைச் சிலுவை நமக்குக் கற்றுத்தருகிறது.

துன்பத்தை நாம் எவ்வாறு எதிர்கொள்ள வேண்டும் என்பதையும் சிலுவை நமக்குக் கற்றுத்தருகிறது. மனித வாழ்வில் வேதனைகளும் சோதனைகளும் தடைகளும் கட்டாயம் இடம்பெறும். இருப்பினும், துன்பத்தைக் கிறிஸ்துவுடன் ஒன்றிக்கச் செய்வதனால் அது பொருள் பெறுகிறது என்பதைச் சிலுவை நமக்கு உறுதிச் சொல்கிறது. "**தம் உடலாகிய திருச்சபைக்காகக் கிறிஸ்து இன்னும் பட வேண்டிய வேதனையை என் உடலில் ஏற்று நிறைவுசெய்கிறேன்**" (கொலோ. 1:24) எனப் பவுலடியார் எழுதுகிறார். நம் போராட்டங்களைக் கடவுளுக்கு ஒப்புக்கொடுக்கும் பொழுது அவை கிறிஸ்துவின் மீட்பளிக்கும் பணியில் அங்கமாகிவிடுகின்றன.

திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் இந்த மறைபொருளைக் குறித்து எழுதுகையில், "**சிலுவை என்பது உண்மையான வாழ்வின் மரம்**" எனக் குறிப்பிட்டார். முன்பு சாவினைப் பிரதிபலித்த சிலுவை இப்போது என்றுமுள வாழ்வின் மூலமாயிற்று. சிலுவை வழியாகக் கிறிஸ்து பாவத்தை வென்று, உயிர்ப்பின் கதவைத் திறந்துவைத்தார்.

புனித அசிசி பிரான்சிஸ் சிலுவையில் ஆழ்ந்த பற்றுக் கொண்டிருந்தார். புனித தமியானோவுக்கு அர்ப்பணிக்கப்பட்ட சிறு கோவில் ஒன்றில் இருந்த பாடுபட்ட சுருபத்தின் முன்னால் அவர் ஒருமுறை நின்றுகொண்டிருந்த

பொழுது, கிறிஸ்து தமது உள்ளத்தில் பேசுவதை உணர்ந்தார். "**பிரான்சிஸ், போய் என் திருச்சபையை சீர்படுத்து**" என்னும் குரலொலியைக் கேட்டார். சிலுவையில் அறையப்பட்ட ஆண்டவரின் ஏவுதலால் அவர் தம்முடைய வாழ்வைத் தாழ்மையுடனும், தொண்டுணர்வுடனும் திருச்சபை புதுப்பித்தலுக்காக அர்ப்பணித்தார்.

சிலுவை என்பது உலகில் நமக்கு உண்டான பணியைக் குறிக்கிறது. திருத்தந்தை பிரான்சிஸ் எழுதுகிறார்: "**கிறிஸ்துவின் சிலுவை என்பது அவருடைய அன்பினால் நாம் தாக்கப்படுவதற்கு அழைப்பு விடுக்கிறது; அடுத்திருப்பவர்களை அன்புடனும் இரக்கத்துடனும் நோக்குவதற்கு நம்மை அழைக்கிறது**" கிறிஸ்து சிலுவையில் வெளிப்படுத்திய தியாகம் நாம் பிறருக்குத் தொண்டு செய்வதற்கு நமக்கு அழைப்பு விடுகிறது; நம்மை காயப்படுத்துவோரை மன்னித்திட நமக்கு அழைப்பு விடுக்கிறது. துன்புறுவோருக்கு எதிர்நோக்கை வழங்கிட நமக்கு அழைப்பு விடுக்கிறது.

வல்லமை, வெற்றி, ஆதாயம் ஆகியவற்றை முதன்மைப்படுத்தும் இன்றைய உலகில், சிலுவை என்பது தாழ்மை, தன்னலமற்ற அன்பு, உண்மையான தொண்டு ஆகியற்றை முன்னிறுத்துகிறது. தன்னலத்திலிருந்து விலகி, இரக்கம், கருணை ஆகியவற்றை நாம் கடைப்பிடித்திட அது நமக்குச் சவால் விடுகிறது.

மொத்தத்தில், சிலுவை என்பது கடவுளின் இதயத்தையே நமக்கு வெளிப்படுத்துகிறது. இயேசு கிறிஸ்துவின் சிலுவைத் தியாகத்தால் சிலுவை நமக்கு மீட்பின் சின்னமாகவும், நிலையான வாழ்வின் வாக்குறுதியாகவும் விளங்குகிறது.

# ஒரு இதயத்தின் ஏக்கம்

முள்ளுக்கும் வலித்திருக்கும்
உம் தலையில் கீரீடமாக
சூட்டபட்ட பொழுது
மரமும் பதறியிருக்கும்
சிலுவையாக செய்யப்பட்டு நீர்
சுமந்த பொழுது
நிலம் கூட கலங்கியிருக்கும்
உம் பட்டு பாதங்கள் தள்ளாடி
நடந்த பொழுது
கல் கூட கசிந்திருக்கும் உம்
புனித இரத்தம் பட்டு தெறித்த பொழுது
இரும்பும் உருகியிருக்கும்
ஆணியாக உம்மீது
அறையப்பட்ட பொழுது
கல்லறையும் அழுதிருக்கும்
உயிரற்ற நீர் உள்ளே
வைக்கப்பட்ட பொழுது
கிருஷ்டி மொத்தமும் துடித்திருக்கும்
நீர் அனுபவித்த பாடுகளை
பார்த்த பொழுது
ஏன் மனிதனுக்க மட்டும்
இன்னும் புரியவில்லை
அத்தனை வலியும் அவனுக்காகத்தான்
இயேசுவே நீர் அனுபவித்தீர் என்று

**ம. டேவிட் டிலன்,**
முளகுமூடு.



# இயேசுவின் இலட்சிய பயணம்

பேரருள்பணி. **ஒய்சிலின் சேவியர்**

விடுதலையே இலட்சியவாதிகளின் உயிர்மூச்சாகவும், உன்னதமான பேச்சாகவும் இருக்கும். மக்களின் கண்களில் கண்ணீர் கசிவதை இலட்சியவாதிகளால் பொறுத்துக் கொண்டுப் பொறுமையாக இருக்க முடிவதில்லை. அவர்கள் அம்புகளைக் கண்டும், வம்புகளைக் கண்டும் பின்வாங்கிப் போவதில்லை. படைகளைக் கண்டும், தடைகளைக் கண்டும் தடம்மாறிச் செல்வதில்லை. அவர்களின் விடுதலை வேட்கையை நாம் எளிதில் வெட்டிவிட முடியாது. அவர்கள் கால்களை வெட்டினாலும் முட்டுகளால் நடந்து முட்டுக்கட்டைகளைத் தகர்த்து முன்னேறிச் செல்வார்கள். இயேசு ஓர் இலட்சியப் போராளி அவர் தாயின் கருவில் இருக்கும்போதே ஏன்? கடவுளின் சிந்தனையில் உதித்தபோதே இலட்சியப் போராளியாகவே இருந்தார் என்பதே வரலாற்று உண்மை. அவரது வாழ்வு முழுவதுமே இலட்சியப் பயணமாக அமைந்திருந்தாலும், அதனுடைய உச்சம் "**குருத்து ஞாயிறு**" என்றால் அது மிகையாகாது.

தவக்காலத்தின் நுழைவாயில் "**திருநீற்று புதன்**" என்றால் பரிசுத்த வாரத்தின் நுழைவாயில் "**குருத்து ஞாயிறு**" ஆகும். இக்குருத்தோலைப் பயணம் இயேசுவின் இலட்சியப் பயணமாகவும், பணிவாழ்வின் உச்சமாகவும் அமைகிறது. குருத்தோலை வெற்றியின் ஆர்ப்பரிப்பின் அடையாளம். எனவேதான், இயேசு வெற்றி ஆர்ப்பரிப்போடு எருசலேமில் நுழைகிறார். எப்போதும் எருசலேமுக்கு வருவதைப் போன்ற பயணம் அல்ல இந்த பயணம்; இது இலட்சிய பயணம். "**தாவீதின் மகனுக்கு ஓசன்னா! ஆண்டவர்**




**பெயரால் வருகிறவர் போற்றப்பெறுக! உன்னதத்தில் ஓசன்னா!**" என்று முழங்கும்போது எருசலேம் நகரே பரபரப்படைந்து இவர் யார்? என்று புதட்டமடைகிறது. இதுவரையிலும் இப்படியொரு பயணம் நடந்ததேயில்லை. எனவேதான் ஆட்சியாளர்களையும், அதிகாரிகளையும்

உரோமை ஆட்சியாளர்களின் கைப்பாவை களையும் இயேசுவின் இந்தப் பயணம் ஆட்டம் காணச் செய்கிறது.

இயேசுவின் இலட்சியத்தை அவர் பொதுவாழ்வில் காலடி எடுத்து வைக்கின்றபோதே தெளிவாக வெளிப்படுத்துகின்றார். ஆண்டவருடைய ஆவி என்மேல் உள்ளது. ஏனெனில், அவர் எனக்கு அருள்பொழிவு செய்துள்ளார். ஏழைகளுக்கு நற்செய்தியை அறிவிக்கவும், சிறைபட்டோர் விடுதலை அடைவர், பார்வையற்றோர் பார்வை பெறுவர் என முழக்கமிடவும் ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்பவும் ஆண்டவர் அருள் தரும் ஆண்டினை முழக்கமிட்டு அறிவிக்கவும் அவர் என்னை அனுப்பியுள்ளார். (லூக். 4: 16-18). அவரது இலட்சிய தெளிவும், ஏழைகள் மீதான அன்பும், கரிசனையும் கனிவும், ஏழைகளுக்கு நம்பிக்கையும், மகிழ்ச்சியையும் கொடுக்கிறது. இயேசு எங்களுக்கா என்கிற எண்ணத்தை உறுதிப்பாடாக அவரது இந்தப் பயணம் கொடுத்தது.

இயேசு பலப் பயணங்களைத் தன்னுடைய வாழ்க்கையின் முதல் கட்டத்திலிருந்தே ஆரம்பித்தார். எகிப்திக்குத் தப்பியோடி நாசரேத்தில் வாழ்ந்ததும், பின்னர் தமது முப்பதாவது வயதில் பாலைநிலத்தில் மேற்கொண்ட பயணம், தனது பெற்றோரோடு அவர் முப்பது ஆண்டுகள் மேற்கொண்ட பயணம் இவையனைத்தும் சிறப்பானப் பணிக்கான, பலிக்கான வாழ்க்கைப் பயணமாக இருந்தாலும் இயேசுவின் இந்த எருசலேம் நோக்கியப் பயணம் அவரது இலட்சிய பயணம். இப்பயணத்தில் அவரது ஒட்டுமொத்த வாழ்க்கையின் பிரதிபலிப்பையும் அவர் வெளிப்படுத்துகிறார். அவரது ஏக்கம், எண்ணங்கள், துன்ப துயரங்கள், போராட்டங்கள், வேரோட்டங்கள் அத்தனையையும் வெளிப்படுத்துவதாக இந்த இலட்சிய பயணம் அமைந்திருந்தது.

இயேசுவின் இந்த இலட்சிய பயணம், அவரது தியாகத்தின் அர்ப்பணத்தின் அடையாளமாக விளங்கியப் பயணம், இயேசுவின் இந்தப் பயணம் மக்களுக்காகத் துன்பங்களை ஏற்று, கல்வாரியில்




பலியாவதற்கு, பங்கிட்டுக் கொடுப்பதற்குத் தயார் என்பதை வெளிப்படுத்தியப் பயணமே இயேசுவின் இந்தப் பயணம். இப்பயணத்தில் பங்கேற்கும் நாம் எவ்வகையான இலட்சியங்களோடு வாழ்கிறோம். எளிமையாகப் பிறந்து, எளிமையாகவே வளர்ந்து, எளிய மக்களுக்காப் பணியாற்றிய இயேசு எளிமையானக் கோலத்தில் கழுதைக் குட்டியின் மேலமர்ந்து இலட்சிய பயணம் மேற்கொண்டு தன்னை பலியிட்டதுபோது, பங்கிட்டு கொடுத்ததுபோல நாமும் இலட்சிய பயணம் மேற்கொண்டு நம்மைப் பங்கிடுவோம், பலியிடுவோம்.



# பாரம்பரியமும் இழந்தவைகளும்

அருள்பணி. ம. டைட்டஸ் மோகன்

ஏப்ரல் 18 – உலக பாரம்பரிய தினம். நம்மை ஒரு பழங்கால ஆறு போல ஓடும் காலத்தின் கரையில் நிறுத்தி சிந்திக்க வைக்கிறது. யுனெஸ்கோவின் 1972ஆம் ஆண்டு உடன்படிக்கையின் அடிப்படையில் உருவாக்கப்பட்டதே இந்நாள். இத்தினம் மனிதகுலத்தின் சிறந்த சொத்துக்களை பாதுகாக்கும் அழைப்பிது; பழம்பெரும் வேர்களைத் தொட்டு, அவற்றை இழக்காதிருக்கும் வழியைத் தேடும் ஒரு பயணம். பாரம்பரியம் என்பது ஒரு பழமையான மரம் போன்றது. அதன் வேர்கள் கடந்த காலத்தில் ஆழமாகப் பரவி, இலைகள் இன்றைய வாழ்வை அலங்கரிக்க, பழங்கள் எதிர்கால சந்ததிக்கு ஊட்டத்தைத் தரும்.

மனிதகுலத்தின் பாரம்பரியம் உலகளாவியது, எல்லைகளைத் தாண்டியது. எகிப்தின் பிரமிடுகள், வெனிஸின் தண்ணீர் நகரம், தாஜ்மஹால் போன்றவை அனைவருக்கும் சொந்தம். யுனெஸ்கோ கூறுவது போல், பாரம்பரியம், வாழ்க்கை மற்றும் உத்வேகத்தின் ஊற்று. அது பன்முகத்தன்மையை கொண்டாடும், அழிவுக்கு எதிரான போராட்டம். இன்றைய காலநிலை மாற்றம், போர், நகரமயமாக்கல் போன்ற அச்சுறுத்தல்களுக்கு எதிராக உலக பாரம்பரிய தளங்களைப் பாதுகாக்க வேண்டிய கடமை நம் அனைவருக்கும் உண்டு. ஆனால், நவீனக் காற்றின் சூறாவளியில் சில இலைகள் உதிர்ந்து போகின்றன. அவற்றை மீட்டெடுப்பதே இத்தினத்தின் உள்ளார்ந்த அழைப்பு.

## தெளிவும் நல்ல தெரிவும் அவசியம்

முதலில் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியம் இரண்டிற்கும் இடையிலான வித்தியாசத்தை தெரிந்து கொள்வது அவசியம். கலாச்சாரம் என்பது ஒரு சமூகத்தின் வாழ்க்கைத் தொகுப்பு; மாறும் தன்மை கொண்டது. பாரம்பரியம் என்பது அந்தக் கலாச்சாரத்தின் கடந்த கால நல்ல அம்சங்களை தேர்ந்தெடுத்து, தற்போதைய தேவைக்காக பயன்படுத்தி பாதுகாப்பது. பாரம்பரியம் கலாச்சாரத்தின் ஒரு பகுதியாயினும், கடந்த காலத்தை மையமாகக்



கொண்டு, தற்போதைய அரசியல் அடையாளத் தேவைகளால் வடிவமைக்கப் படுகிறது.

இன்று பாரம்பரியம் தேவையில்லை என்று வாதாடுபவர்களும் உண்டு; "**இன்னும் ஏன் பழைய காலத்திலே இருக்கிற**" என்று மற்றவர் செயல்பாடுகளைக் குறித்து பேசுவதும் உண்டு. காலத்தால் பழமையானவற்றை தேவையற்றது, பயனற்றது என்கிற ரீதியில் தொலைத்து விடுபவர்களும் உண்டு. இங்குதான் தெளிவுத் தேவை. பாரம்பரியம் வெறும் பழமையான பொருட்கள் அல்லது நினைவுகளின் தொகுப்பு அல்ல; மனிதகுலத்தின் உள்ளார்ந்த அடையாளம்; ஒரு சமூகத்தின் ஆன்மாவின் எதிரொலி; காலத்தின் தொடர்ச்சியாய் கடந்தகால அனுபவங்களை இன்றைய தலைமுறைக்கு இணைக்கும் ஒரு பாலம். ஆங்கிலத்தில் இதனை ஹெரிடேஜ் (Heritage) என்கிறோம். லத்தீன் மூலத்தின் (Hereditas) இச்சொல்லுக்கு "**வாரிசு**" என்று அர்த்தம். அதாவது, பரம்பரை பரம்பரையாக, வாழையடி வாழையாக கடந்து வரும் முன்னோர்களின் சொத்து, அறிவு, கலாச்சாரம், இயற்கை வளங்கள், தொல்லியல் கட்டிடங்கள் போன்றவற்றை நிகழ்காலத்திற்கு, எதிர்காலத்திற்கு அனுப்பும் பொக்கிஷம்.

**பாரம்பரியம் புறக்கணிக்கப்பட வேண்டியதா?**

பாரம்பரியம் ஒரு பழங்கால புத்தகம் போல! அதன் பக்கங்களில் எழுதப்பட்டிருக்கும் கதைகள் நமது அடையாளத்தை வரையறுக்கும். ஆனால் அவற்றைத் தொட்டு உணர்ந்தால் மட்டுமே அது உயிர்ப்பு பெறும். பல நேரங்களில் நமது பாரம்பரியம், பண்பாடு கலாச்சாரம் குறித்த அறிவும் இல்லை. தனிப்பட்ட அளவில் குடும்ப பாரம்பரியங்கள், சமூகத்தில் கலாச்சார வழக்கங்கள், உலகளவில் யுனெஸ்கோ போன்ற பாரம்பரியங்களை பாதுகாக்கும் தளங்கள் - இவையாவும் அன்றாட வாழ்வில் செயல்வடிவம் பெறுவதால் மட்டுமே பாரம்பரியங்கள் உயிர்பெற முடியும். இன்றைய மனிதர்களின் படைப்பாற்றல், அறிவு வரலாறு, பன்முகத்தன்மை ஆகியவற்றின் சாட்சியாக துலங்குபவை மனித பாரம்பரியங்களே என்றால் மிகையல்ல.

பாரம்பரியத்தை மனித இருப்பின் தொடர்ச்சி மற்றும் மாற்றத்தின் சமநிலை என்கிறார்கள் தத்துவவியலாளர்கள். அது காலத்தின் நினைவுகளைத் தாங்கிய ஒரு கண்ணாடி. அதில் நமது முன்னோர்களின் போராட்டங்கள், வெற்றிகள், அழிவுகள், முரண்பாடுகள், செயல்திட்டங்கள் என வாழ்வியல் கலைகள் பிரதிபலிக்கின்றன. ஹெகல் போன்ற தத்துவஞானிகள் பாரம்பரியத்தை வரலாற்றின் விவாதமாய் (டயலெக்டிக்) காண்கின்றனர்: கடந்த காலம் தற்போதையை வடிவமைக்கும், தற்போது எதிர்காலத்தை உருவாக்கும். ஒரு சமூகம் தனது பாரம்பரியத்தை இழந்தால், அது வேரற்ற மரம் போல வாடிவிடும். அது பன்முகத்தன்மையை ஊக்குவிக்கும், அமைதியை உருவாக்கும், வளர்ச்சியைக் கொடுக்கும், மதிப்பீடுகளைத் தக்க வைக்கும்.

**இழந்து கொண்டிருக்கிறோம்; விழித்தெழுவோம்!**

நம் தமிழ்ப் பாரம்பரியம் ஒரு பழங்கால கடல் போல ஆழமானது, அலைகளில் பல்வேறு அழகுகள். தமிழ் மொழி, உலகின் பழமையான உயிருள்ள மொழிகளில் ஒன்று, சங்க இலக்கியங்கள் (தொல்காப்பியம், எட்டுத்தொகை) அதன் அறிவுப் பெட்டகம். பிரகதீஸ்வரர் கோயில் (யுனெஸ்கோ தளம்), மதுரை மீனாட்சி கோயில் திராவிட கட்டிடக்கலைக்கு பெயர் பெற்றவை. பரதநாட்டியம், கர்நாடக இசை போன்றவை நம் தனித்துவம். திணை, கம்பு, கேழ்வரகு, இட்லி, தோசை, சாம்பார், பதநீர் போன்ற உணவு வகைகளும், சேலை, வேஷ்டி ஆடைகளும் தமிழரின் தனித்துவம். பொங்கல் பண்டிகை. மர வழிபாடு, திருமணம் போன்ற கொண்டாட்டங்கள் இயற்கையோடும்,

இறைவனோடும், சமூகத்துடனும் நம்மை இணைக்கும் சக்திகள்.

இன்றைய நவீனத்தின் வெள்ளத்தில், நம் தமிழ் பாரம்பரிய கலாச்சாரங்கள் உதிரும் இலைகள் போல இழக்கப்படுகின்றன. பாரம்பரியங்களைத் தொலைத்த இளவல்களின் நவீன கலாச்சார மேகம் நாளுக்குநாள் எல்லைமீறி சென்று கொண்டிக்கிறது. உதாரணத்திற்கு இன்றைய திருமணம் என்கிற கலாச்சாரப் பாரம்பரிய செயலினை மட்டும் உற்று நோக்குவோம். இந்தியாவில் "**ப்ரீ-வெட்டிங் ஷூட்**" ஒரு மிகப் பெரிய ட்ரெண்டாக மாறிக் கொண்டிருக்கிறது. எங்கோ சில ஜோடிகள் மட்டும் செய்தது இப்போது கிட்டத்தட்ட எல்லா இளம் ஜோடிகளுக்கும் கட்டாயம் என்றாகி விட்டது. வீண் செலவு ஒருபுறமெனில், இன்ஸ்ட்ரகிராமில் ரீல்ஸ்போட, ஸ்டேட்டஸ் வைக்க என்கிற எண்ணம் தாண்டி இதிலென்ன நல்லெண்ணம் மேலோங்கி இருக்கிறது? கணவன் – மனைவியாய் தனியறையில் செய்ய வேண்டிய காரியங்களையெல்லாம் பொதுவெளியில் திருமணத்திற்கு முன்னமே காட்சிப்படுத்தும் அறநெறி தொலைத்த இந்நடைமுறையை சகித்துக் கொண்டுதான் கடக்க வேண்டியுள்ளது. இங்குதான் பாரம்பரியத்தின் தேவை எழுகிறது.

அவ்விதமே, நகரமயமாக்கல் காரணமாக பாரம்பரிய பழங்கால வீடுகள், கட்டிடங்கள் அழிக்கப்படுகிறது. கோயில்களின் சுவரோவியங்கள் சரியான விதத்தில் பராமரிக்கப்படாததால் ஈரப்பதம் காரணமாக மங்கிப்போகின்றன. தமிழ் பயன்பாடு குறைந்து ஆங்கிலம் ஆதிக்கம் பெறுகிறது. பாரம்பரிய நடனம், இசை நலிந்து மேற்கத்திய மோகம் வலுப்பெறுகிறது. துரித உணவிற்கு அடிமையாகி பாரம்பரிய உணவு முறைகள் கைவிடப்படுகிறது. இங்ஙனம், வாழ்வியலின் ஒவ்வொரு தளங்ளைப் பற்றி சிந்திக்கும்போதும் நாம் இழந்து கொண்டிருக்கும் பாரம்பரியங்களை இலகுவாக இனம் காண முடிகிறது. நம் பாரம்பரிய தளங்களையும் செயல்களையும் மீட்டெடுப்பது அவசியம். மீட்டெடுப்பு என்பது ஒரு விதைப்பு. அதற்கு விழிப்புணர்வு, கல்வி, செயல்திட்டங்கள் அவசியம். யுனெஸ்கோ உதவியுடன் பழங்கால கட்டிடங்கள், கலைநுட்பங்கள், தொல்லியல் இடங்களைப் பாதுகாப்போம். நவீன தொழில்நுட்பத்தின் (டிஜிட்டல் ஆர்கைவ், விர்ச்சுவல் டூர்கள்)



உதவியுடன் நமது பாரம்பரியங்களைப் பாதுகாப்போம். கல்வி வழியாக நமது தமிழ் பாரம்பரியங்களைப் பற்றிய அறிவூட்டல் செய்வோம். பாரம்பரிய பண்டிகைகளை சமூகக் கொண்டாட்டங்களாக சிறப்பிப்போம். இவை அனைத்திற்கும் தேவை இரண்டே காரியங்கள் – அன்பும் அக்கறையும்! இவற்றால் மட்டுமே நம் பாரம்பரியத்தை மீட்டெடுக்க முடியும். பாரம்பரியம் ஒரு பொக்கிஷம், அதை இழக்காதிருப்பது நமது கடமை. இழந்தவைகளை மீட்டு, வேர்களை வலுப்படுத்தி, எதிர்காலத்திற்கு ஒரு செழிப்பான மரத்தை விட்டுச் செல்வோம்.



# அறிவுலக ஆசான் அம்பேத்கார்

பேரருள்பணி. M. C. ராஜன்

இந்திய வரலாற்றில் சமூக நீதி, சமத்துவம், மனித கண்ணியம் ஆகியவற்றிற்காக தனது முழு வாழ்வையும் அர்ப்பணித்த மகத்தான சிந்தனையாளர் டாக்டர் பி.ஆர். அம்பேத்கார். அவர் ஒரு அரசியல் தலைவர் மட்டுமல்ல,



ஆழமான அறிவும், ஆய்வும், மனிதநேயக் கண்ணோட்டமும் கொண்ட "**அறிவுலக ஆசான்**" என்று அழைக்கத் தகுந்தவர். சமுதாயத்தின் அடித்தட்டு மக்களுக்கு கல்வி, உரிமை, சமத்துவம் ஆகியவற்றை வழங்க வேண்டும் என்ற உயர்ந்த இலட்சியத்தோடு வாழ்ந்த அவர், இந்திய சமூக மாற்றத்தின் முக்கிய தூண்களில் ஒருவராகத் திகழ்கிறார்.

## 1. வாழ்க்கையின் ஆரம்பமும் கல்விப் பயணமும்

B. R. Ambedkar 1891 ஏப்ரல் 14 அன்று மகாராஷ்டிர மாநிலத்தின் மாவ் (Mhow) என்ற இடத்தில் பிறந்தார். குடும்பம் சமூக அடக்குமுறைகளால் பாதிக்கப்பட்டிருந்தாலும், கல்வியே மனிதனை உயர்த்தும் என்ற உறுதியான நம்பிக்கையுடன் அவர் வளர்ந்தார். சிறு வயதிலிருந்தே பள்ளியில் பல்வேறு சமூக பாகுபாடுகளையும் அவமதிப்புகளையும் சந்தித்தார். ஆனால் அந்த அனுபவங்கள் அவரை தளரச் செய்யவில்லை; மாறாக அறிவால் சமூகத்தை மாற்ற வேண்டும் என்ற உறுதியை உருவாக்கின. அவரது மேன்மையான அறிவும் முயற்சியும் காரணமாக வெளிநாட்டில் உயர் கல்வி கற்கும் வாய்ப்பு கிடைத்தது. அமெரிக்காவின் Columbia University மற்றும் இங்கிலாந்தின் London School of Economics போன்ற உலகப் புகழ்பெற்ற கல்வி நிலையங்களில் பொருளாதாரம், அரசியல், சட்டம் ஆகிய துறைகளில் ஆழ்ந்த ஆய்வுகளை மேற்கொண்டார். இவ்வாறு பல துறைகளில் பெற்ற விரிவான அறிவு, அவரை உண்மையான "**அறிவுலக ஆசான்**" என உலகம் பாராட்டச் செய்தது.

## 2. சமூக நீதி மற்றும் சமத்துவப் போராட்டம்

இந்திய சமூகத்தில் நீண்ட காலமாக நிலவி வந்த சாதி அடிப்படையிலான பாகுபாடுகள், மனித கண்ணியத்தைப் பாதித்தன. அம்பேத்கார் இந்த அநீதிக்கு எதிராக துணிவுடன் குரல் கொடுத்தார். சமுதாயத்தில் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு கல்வி, வேலை, அரசியல் உரிமைகள் ஆகியவை கிடைக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

அவர் "**கல்வி பெறுங்கள், ஒழுங்குபடுத்துங்கள், போராடுங்கள்**" (Educate, Organize, Agitate) என்ற கோஷத்தை முன்வைத்து மக்களை விழிப்புணர்வுக்கு அழைத்தார். மனிதன் பிறப்பால் அல்ல, தனது அறிவாலும் செயலாலும் உயர்வடைகிறான் என்ற கருத்தை அவர் வலியுறுத்தினார். இவ்வாறு அறிவின் வழியே சமூக மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற அவரது சிந்தனை, அவரை அறிவுலகத்தின் ஒளிவிளக்காக மாற்றியது.

### 3. இந்திய அரசியலமைப்பின் வடிவமைப்பாளர்

இந்தியா சுதந்திரம் பெற்ற பின் புதிய நாட்டின் சட்ட அடித்தளத்தை உருவாக்குவது மிகப்பெரிய பொறுப்பாக இருந்தது. அந்தப் பொறுப்பை சிறப்பாக நிறைவேற்றியவர் அம்பேத்கார். அவர் இந்திய அரசியலமைப்பு வரைவு குழுவின் தலைவராக இருந்து, ஜனநாயகத்தின் அடிப்படை மதிப்புகளைக் கொண்டு அரசியலமைப்பை உருவாக்கினார். Constitution of India, மனித உரிமைகள், சமத்துவம், மதச்சார்பின்மை, சமூக நீதி போன்ற உயர்ந்த கொள்கைகளை முன்னிறுத்துகிறது. எல்லா குடிமக்களும் சட்டத்தின் முன் சமம் என்ற தத்துவம் இதில் வலியுறுத்தப்படுகிறது. இவ்வாறு அவர் உருவாக்கிய அரசியலமைப்பு, இந்தியாவின் ஜனநாயகத்தை உறுதிப்படுத்திய ஒரு மாபெரும் ஆவணமாகும்.

### 4. அறிவியல் சிந்தனை மற்றும் சமூக மாற்றம்

அம்பேத்கார் ஒரு அரசியல் சிந்தனையாளர் மட்டுமல்ல, ஒரு ஆழ்ந்த அறிஞரும் ஆவார். பொருளாதாரம், சமூகவியல், அரசியல், மதம், சட்டம் ஆகிய பல துறைகளில் அவர் எழுதிய நூல்கள் இன்றும் ஆராய்ச்சியாளர்களுக்கு வழிகாட்டுகின்றன. அவர் எழுதிய "Annihilation of Caste" போன்ற நூல்கள் சமூக சமத்துவத்தின் அவசியத்தை வலியுறுத்துகின்றன. அறிவு, தர்க்கம், மனிதநேயம் ஆகியவற்றின் அடிப்படையில் சமூகத்தை மாற்ற வேண்டும் என்ற அவரது சிந்தனை இன்றும் பலருக்கு ஊக்கமாக உள்ளது.

### 5. மனித கண்ணியத்திற்கான போராட்டம்

அம்பேத்காரின் வாழ்வின் மையத்தில் மனித கண்ணியமே இருந்தது. சமூகத்தில் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு மரியாதை கிடைக்க வேண்டும் என்ற அவரது கனவு, பல சமூக மாற்றங்களுக்கு வழிவகுத்தது. கல்வி வாய்ப்புகள், அரசு வேலைகளில் ஒதுக்கீடு, பெண்களின் உரிமைகள் போன்ற பல முன்னேற்றங்கள் அவரது சிந்தனையால் உருவானவை. அவரது வாழ்க்கை, துன்பங்களை தாண்டி அறிவின் மூலம் உயர்ந்த மனிதரின் சிறந்த எடுத்துக்காட்டாகும். சமூக அநீதிகளை எதிர்த்து போராடிய அவரது தைரியம், தலைமுறைகளை ஊக்குவிக்கும் ஒரு ஒளிக்கதிராகத் திகழ்கிறது.

### 6. நவீன இந்தியாவுக்கு அளித்த பங்களிப்பு

இன்றைய இந்தியாவில் சமூக நீதி, மனித உரிமைகள், ஜனநாயக மதிப்புகள் ஆகியவை வலுப்பெற காரணமாக அம்பேத்காரின் பங்களிப்பு மிக முக்கியமானது. அவர் காட்டிய அறிவு, துணிவு, மனிதநேயம் ஆகியவை நவீன இந்தியாவின் அடையாளமாக மாறியுள்ளன.

அவரது சிந்தனைகள் அரசியல் மட்டுமல்ல் கல்வி, சமூக வளர்ச்சி, மனித உரிமைகள் ஆகிய துறைகளிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. அதனால் தான் அவர் "**இந்திய அரசியலமைப்பின் தந்தை**" மட்டுமல்ல் "**அறிவுலக ஆசான்**" என்றும் போற்றப்படுகிறார்.

### முடிவுரை

டாக்டர் அம்பேத்கார் ஒரு மனிதர் மட்டுமல்ல, ஒரே சிந்தனை. சமத்துவம், நீதி, மனித கண்ணியம் ஆகியவற்றின் அடையாளம். அறிவின் சக்தியால் சமூகத்தை மாற்ற முடியும் என்பதை தனது வாழ்வால் நிரூபித்தவர். இன்றைய தலைமுறைக்கு அவர் வழங்கும் மிகப்பெரிய பாடம் – கல்வி மற்றும் அறிவு தான் உண்மையான விடுதலைக்கு வழி என்பதே. ஆகவே, அம்பேத்காரின் சிந்தனைகளை புரிந்து கொண்டு நடைமுறைப்படுத்துவது தான் அவருக்கு நாம் செலுத்தும் உண்மையான மரியாதையாகும். அதனால், டாக்டர் அம்பேத்கார் உண்மையில் அறிவுலகின் ஒளிவிளக்காகவும் மனித சமத்துவத்தின் மகத்தான முன்னோடியாகவும் என்றும் நினைவுகூரப்படுவார்.

# படைப்பைக் காத்து உயிர்த்தெழுவோம்

திருக்குறள் கவிச்செம்மல்
அருள்நிதி S.M. **செபஸ்டியான்**
பேராசிரியர், மனவளக்கலை யோகா.

விண்ணைப் படைத்து மண்படைத்தார்
விந்தை யான நம்மிறைவன்!
ஆணைப் படைத்துப் பெண்படைத்தார்
அற்புத மான நம்மிறைவன்!

மண்ணில் வளரும் செடிகொடிகள்
மகத்துவ மான கனிவளங்கள்
விண்ணில் மிளிரும் விண்மீன்கள்
வியக்கும் கோள்கள் எலாம்படைத்தார்!

காற்றைக் கடலை பறவைகளை
கடலில் வாழும் உயிரிகளை
ஏற்ற மான மலைகளையும்
எல்லா விலங்கை யும்படைத்தார்!

படைப்பைக் காத்து பயிர்செய்து
பல்சுவை உணவை உண்போமே!
கிடைக்கும் நல்ல கனிவளத்தை
கண்ணிய மாகக் காப்போமே!

காற்றை நீரைச் சூழலினை
கடமை உணர்ந்து காப்போமே!
சோற்றைத் தந்திடும் விவசாயம்
சீராய் வளர உழைப்போமே!

இயற்கை வளத்தை இனிமையாய்
இருக்கச் செய்வோம் தோழர்களே!
செயற்கை யான பண்புகளைச்
சேர்க்க வேண்டாம் தோழர்களே!

இறைவன் வழியில் பயணிப்போம்!
இனிமை யாகப் பயணிப்போம்!
நிறைமதி யோடு பயணிப்போம்!
நிம்மதி காண பயணிப்போம்!

பாவம் விட்டு உயிர்த்தெழுவோம்!
பண்பை வளர்த்து உயிர்த்தெழுவோம்!
சாவை வெல்ல உயிர்த்தெழுவோம்
சமத்துவம் பேணி உயிர்த்தெழுவோம்!

தீமை விட்டு உயிர்ப்போமே!
துன்பம் நீங்கி உயிர்ப்போமே!
வாய்மைப் பேணி உயிர்ப்போமே!
வளமுடன் வாழ்ந்து உயிர்ப்போமே!

பிறரை அன்பு செய்வோமே!
பிறர்க்கு உதவி புரிவோமே!
நிறைவாய் வாழக் கற்போமே!
நல்வழிப் பயணம் செல்வோமே!

இரக்கம் காட்டி வாழ்வோமே!
இன்னல் நீக்கி வாழ்வோமே!
சிறப்பாய் உழைத்து உண்போமே!
சிந்தை மகிழ்ந்து வாழ்வோமே!

ஆணவம் விட்டு உயிர்ப்பீரே!
அக்கிர மங்கள் விடுவீரே!
நாணய மாக வாழ்வீரே!
நற்பண் புடனே திகழ்வீரே!

நடிப்போர் பின்னே போகாதே!
நயவஞ் சகருடன் செல்லாதே!
குடிவெறி இன்றி மீள்வாயே!
குடும்பம் காத்து நிற்பாயே!

ஆண்டவர் வழியில் உயிர்த்தெழுவோம்!
அறிவின் வழியில் உயிர்த்தெழுவோர்
பண்பா டுடனே உயிர்த்தெழுவோம்!
பகுத்தறி வுடனே உயிர்த்தெழுவோம்.



# வருமுன் காப்போம்

முனைவர். திருமதி. **அ. ரீனா இவெஞ்சி**
கல்லூரி முதல்வர்,
புனித சவேரியார் கத்தோலிக்க செவிலியர் கல்லூரி.

“**நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும் வாய்நாடி வாய்ப்பச் செயல்**”

நோய் என்னவென்று ஆராய்ந்து நோயின் காரணம் கண்டறிந்து அதனை தவிர்க்கும் வழியையும் அறிந்து அதன்படி வாழ்வது நோயிலிருந்து மனிதனையும் குடும்பத்தையும் சமுதாயத்தையும் நாட்டையும் பாதுகாக்கும்

நோய்களைப் பற்றிய தகவல்களை சேர்த்து வைப்பது, கணக்கீடு செய்வது, தீர்வுகளை உலகளாவிய முறையிலும் தனிப்பட்ட நாடுகளின் தன்மைக்கு ஏற்பவும் செயல்படுத்த ஊக்குவிக்கும் நிறுவனம்; உலக சுகாதார மையம். ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் மாதம் 7ஆம் நாள் உலக சுகாதார தினமாக கொண்டாடப்படுகிறது. இந்த ஆண்டு "**அறிவியலுக்காக ஒன்றிணைவோம்**" (Together for Science) என்னும் மையகருத்துடன் இந்த நாள் கொண்டாடப்படுகிறது. இந்த நாளை ஒட்டி இரண்டு முக்கியமான, நடைமுறையில் நாம் கொண்டுவர சாத்தியமான உடல் ஆரோக்கியம் சார்ந்த தகவல்களை இப்பதிவில் காணலாம்.

## இரத்த சோகை

நமது இரத்தத்தில் சிவப்பணுக்களின் அளவு குறிப்பிட்ட அளவிற்கு கீழ் காணப்படுவது இரத்த சோகை எனப்படும். இந்த ரத்த சோகை 15 வயது முதல் 19 வரை உள்ள வளரிளம் பெண்களில் 60 விழுக்காடு பெண்களில் காணப்படுகிறது. அதிலும் நமது கன்னியாகுமரி மாவட்டத்தில் அதிகமான வளரிளம் பருவ பெண்களுக்கு இந்த இரத்த சோகை உள்ளது கண்டறியப்பட்டுள்ளது. இந்த இரத்த சோகைக்கான காரணங்கள், சரியான ஆரோக்கியமான உணவு உண்ணாமல் இருத்தல், உண்ணும் உணவு உடம்பில் ஜீரணம் ஆகாமல் இருத்தல், ஊட்டச்சத்து குறைபாடு அதாவது இரும்புச்சத்து, போலிக் அமில குறைபாடு, வைட்டமின் சி குறைபாடு இவை இதற்கான முக்கியமான காரணங்களாக உள்ளன. வளரிளம் பெண்களுக்கு ஏற்படும் இந்த இரத்த சோகை அவர்களுடைய எதிர்காலத்தில் கர்ப்ப காலம் மற்றும் குழந்தை பேறு காலங்களை மிகக் கடினமானதாக மாற்றுகின்றது. கர்ப்ப காலத்தில் குழந்தையின் வளர்ச்சி குறைவது, இரத்த போக்கு மற்றும் கருச்சிதைவு ஏற்படுவது, குழந்தை பிறப்பின் போது இரத்த போக்கு என ஆபத்துக்களை அடுக்கி கொண்டே போகலாம். வளரிளம் பெண்கள் இரத்த சோகையில் இருந்து பாதுகாத்துக் கொள்ள, இரும்புச்சத்து, போலிக் அமிலம் வைட்டமின் சி நிறைந்த உணவுகளை உட்கொள்ள வேண்டும். ஆறு மாதத்திற்கு ஒருமுறை வயிற்றுப் பூச்சியை கட்டுப்படுத்தும் மருந்துகளை எடுக்க வேண்டும். அதிகமான மாதவிடாய் இரத்தப்போக்கு இருந்தால் அதற்கான தீர்வுகளை மருத்துவ ஆலோசனையுடன் எடுத்துக் கொள்ள வேண்டும். நமது அரசு வழங்கும் வாராந்திர இரும்பு மற்றும் போலிக் அமில மாத்திரைகளைப் பள்ளிகளிலும் அங்கன்வாடிகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

## இரும்பு சத்து மிகுந்த உணவு வகைகள்

ராகி உணவுகள் | பேரிச்சம் பழம் | கறுப்பு உலர் திராட்சை | பச்சை கீரை வகைகள்



கம்பு மாவில் செய்த உணவுகள் | எள் உணவுகள் | பீட்ரூட் | தேன் | கருப்பட்டி

தமிழ்நாட்டில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட இரத்த சோகை ஆய்வுகள் மூலம் கர்ப்பிணிகள், இனப்பெருக்க வயது பெண்கள் மற்றும் வளரிளம் பெண்களிடையே இரத்த சோகையை குறைக்கும் வழி முறைகளாக, ஊட்டச்சத்து மேம்பாடு, இரும்பு மாத்திரை உட்கொள்ளும் முறைகள், இரும்புச் சத்து அதிகம் உள்ள உணவுகள் பற்றிய விழிப்புணரவு, சிகிச்சை பற்றிய சரியான ஆலோசனை பெற்றுக்கொள்ளுதல் முக்கியமானதாக கருத்தப்படுகின்றன.

நமது மாவட்டத்தில் பெண்களுக்கு வளரிளம் பருவத்தில் (மாதவிடாய் தொடங்கும் காலத்தில்) உடல் ஆரோக்கியம் மற்றும் வளர்ச்சிக்காக சத்தான புவிசார் உணவுகள் கொடுக்கும் வழக்கம் உண்டு. இந்த நேரத்தில் உடலுக்கு வலிமை தரவும் இரத்தச்சத்தைக் கூட்டவும் கேழ்வரகு கஞ்சி, உளுந்து களி, எள்ளு, பனைவெல்லம், நாட்டுக்கோழி முட்டை, மீன், கீரை வகைகள், பருப்பு மற்றும் பயறு வகைகள் போன்ற உணவுகள் இதில் அடங்கும். மேலும் தேங்காய், வாழைப்பழம் மற்றும் கிழங்கு வகைகள் போன்ற உள்ளூர் உணவுகளும் உடலுக்கு சக்தி மற்றும் தேவையான ஊட்டச்சத்துகளை வழங்குகின்றன. இவ்வாறு பாரம்பரிய புவிசார் உணவுகள் வழங்கப்படுவதால் வளரிளம் பருவ பெண்களின் உடல் வளர்ச்சி மேம்பட்டு ஆரோக்கியம் பாதுகாக்கப்படுகிறது. இதை தவறாமல் கடைபிடிக்க வேண்டும்.

### தொப்புள் கொடி இரத்த வங்கி

தொப்புள் கொடி இரத்த வங்கி என்பது குழந்தை பிறக்கும் போது தொப்புள்கொடியில் இருந்து வரும் ரத்தத்தை சேகரித்து, வருங்கால மருத்துவ தேவைகளுக்காக சேமித்து வைக்கும் முறையாகும். இது மரபணு சார்ந்த நோய்கள், புற்றுநோய், இரத்தம் சம்பந்தமான நோய்களுக்கு தீர்வளிக்கும் சிகிச்சையாக பயன்படுத்தப்படும். பல்வேறு தனியார் தொப்புள்கொடி வங்கிகள் இந்த சேவையை வழங்குகின்றன. இந்த செல்கள் உடலில் பல வகையான இரத்த மற்றும் நோய் எதிர்ப்பு அமைப்பு செல்களாக மாற்றமடையும் திறன் கொண்டவை. எனவே, தொப்புள் கொடி இரத்தம் மூலம் காப்பகத்தில் சேமிக்கப்பட்ட ஸ்டெம் செல்கள் பல்வேறு மருத்துவ சிகிச்சைகளில் பயன்படுத்தப் படுகின்றன.


முதன்மையாக, இரத்த நோய்களுக்கு சிகிச்சை அளிக்க இந்த செல்கள் பயன்படுத்தப்படுகின்றன. குறிப்பாக லியூகீமியா (Leukemia), லிம்போமா (Lymphoma), தாலசீமியா (Thalassemia), அப்பிளாஸ்டிக் அனீமியா (Aplastic anemia) போன்ற நோய்களில் எலும்பு மஜ்ஜை மாற்று சிகிச்சைக்கு மாற்றாக இந்த ஸ்டெம் செல்கள் பயன்படுத்தப்படுகின்றன. மேலும், மரபணு சார்ந்த நோய்கள் மற்றும் நோய் எதிர்ப்பு குறைபாடு (immune deficiency disorders) போன்ற நிலைகளிலும் இந்த செல்கள் பயன்படுகின்றன.

அதனைத் தவிர, சமீபத்திய மருத்துவ ஆராய்ச்சிகளில் தொப்புள் கொடி ஸ்டெம் செல்கள் நரம்பியல் நோய்கள் (neurological disorders), உதாரணமாக செரிப்ரல் பால்சி

(Cerebral palsy), ஆட்டிசம் (Autism), மற்றும் சில மூளை காயங்கள் போன்றவற்றிற்கான சிகிச்சை ஆய்வுகளில் பயன்படுத்தப்படுகின்றன. மேலும், மீளுருவாக்க மருத்துவம் (Regenerative medicine) என்ற துறையில் உடல் திசுக்களை புதுப்பிக்கவும் உதவுகின்றன.

இதனால், தொப்புள் கொடி இரத்தக் காப்பகம் எதிர்கால மருத்துவ சிகிச்சைகளுக்கான முக்கியமான உயிரியல் வளமாக (biological resource) கருதப்படுகிறது. இது குடும்ப உறுப்பினர்களுக்கோ அல்லது தேவையான பிற நோயாளிகளுக்கோ ஸ்டெம் செல்கள் மாற்று சிகிச்சைக்கு உதவும் வாய்ப்பை வழங்குகிறது.

இதனை நடைமுறைப்படுத்த கர்ப காலத்திலேயே நாம் தொப்புள் கொடி சேமிப்பு வங்கிகளை தொடர்பு கொண்டு பதிவு செய்ய வேண்டும். குழந்தை பிறப்பிற்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் பொழுது அவர்களுக்கு தெரிவிக்க வேண்டும். குழந்தை பிறந்தவுடன் தொப்புள் கொடியில் இருந்து வரும் இரத்தத்தை எடுத்து, அதனை சுத்திகரிப்பு செய்து, குளிர்ந்த நிலையில் சேமித்து வைக்கப்படும். இது குழந்தையின் வாழ்நாள் முழுவதும் பயன்படும் ஒரு சுகாதார காப்பீடு "**காலத்தே பயிர் செய்**" என்னும் ஔவையாரின் கூற்றின் படி எந்த ஒரு செயலையும் அதற்குரிய சரியான காலத்தில் தொடங்கினால் மட்டுமே முழுமையான பலன் கிடைக்கும். இல்லையேல் இழப்பு ஏற்படும்.




தொப்புள் கொடி இரத்தம் சேமிப்பு

எனவே உடல் ஆரோக்கியத்திற்கான மேற்கண்ட இந்த இரண்டு முறைகளுமே ஒரு இடத்தில் நாம் தவறவிட்டால் மீண்டும் நமக்கு கிடைக்காது. வாய்ப்புகளை பயன் படுத்தி கொள்ளுங்கள்.

***அனைவருக்கும் உலக சுகாதார தின வாழ்த்துக்கள்...***

அடுத்த இதழ் “ **உழைப்பின் உன்னதமே உயர்வு** ” என்ற சிந்தனையில் மலர இருக்கின்றது. நமது "**புதிய தேடல்**" இதழை மெருகூட்டுவதற்கும் வாசகர்கள் எளிதில் படிப்பதற்கும் ஆசிரியரின் வேண்டுகோளுக்கு ஏற்ப தங்களது கவிதை, கட்டுரை, கதை துணுக்குகள், சிந்தனைகளை **1, $1^1/_2$, 2** பக்கத்திற்குள் **02-03-2026**-ம் தேதிக்கு முன் புதிய தேடல் முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். சிறந்த படைப்புகள் இதழில் வெளியிடப்படும். உங்கள் விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன.



# ஜாலியன் வாலா பாக்
## குருதியின் கறை

பரக்குன்று **சேவியர்**

பிப்ரவரி 14 என்ன ஸ்பெஷல் என எந்த ஒரு இளையவரிடமும் கேளுங்கள் வேலண்டைன்ஸ் டே என குதூகலமாய்ச் சொல்வார்கள். அதே நபரிடம் ஏப்ரல் 13 என்றதும் என்ன நினைவுக்கு வருகிறது என கேளுங்கள், நிச்சயமாக அவர்கள் ஜாலியன் வாலாபாக்கை நினைவில் கொண்டு வரவே மாட்டார்கள்.

ஒரு மாபெரும் வரலாற்றுத் துயரம் இன்றைய தலைமுறையின் நினைவிலிருந்து முழுமையாய் மறைந்து விட்டது. ஒரு மாபெரும் விடுதலைத் தியாகத்தை அடுத்த தலைமுறையினரிடம் உயிர்ப்புடன் வைத்திருக்காத பிழைக்காய் நாம் வெட்கப்பட வேண்டும்.

1919ம் ஆண்டு ஏப்ரல் 13ம் தியதி ஒரு அமைதியின் கூட்டம், ஒரு மிகப்பெரிய படுகொலையில் முடிவடைந்தது. அது ஜாலியன் வாலாபாக் படுகொலை என வரலாற்றின் வடுவாய் நிரந்தரத் துயரமாய் நிரம்பியிருக்கிறது. ரௌலட் சட்டத்துக்கு எதிராய்க் கூடிய ஆயிரக்கணக்கான மக்கள் மீது எந்த விதமான முன்னறிவிப்பும் இன்றி, எந்த விதமான ஈவு இரக்கமும் இன்றி துப்பாக்கிக் குண்டுகள் சீறிப் பாய்ந்தன. அங்கே தப்பித்து ஓடும் வழியும் இருக்கவில்லை.

அந்தக் கூட்டத்தில் குழந்தைகள், பெண்கள், ஆண்கள் என நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். ஆயிரக்கணக்கானோர் படுகாயம் அடைந்தனர். சுவரைத் தாண்டி தப்பிக்கலாம் என நினைத்தவர்களும் துப்பாக்கிக் குண்டுகளுக்குப் பலியானார்கள். பத்தே நிமிடம், ஒரு படுபாதகச் செயல் அங்கே நடந்தேறியது. அந்த சுவர் இரத்தசாட்சிகளின் சுவர் என அழைக்கப்படுகிறது.

"**இந்த இடத்தில் என்ன நடந்தது என்பதை உலகம் அறிந்து கொள்ள வேண்டும்**" என இரவீந்திர நாத் தாகூர் அவர்கள் எழுதினார். துப்பாக்கிக் குண்டுகள் இந்திய விடுதலை உணர்வை சாகடிக்கும் என எதிரிகள் நினைத்தார்கள். ஆனால் அது தூங்கிக் கொண்டிருந்தவர்களின் செவிகளில் நுழைந்து, அவர்களை விழித்தெழச் செய்தது என்பது தான் நிஜம். இந்திய விடுதலையை எழுதிய சிவப்பு மையாக ஜாலியன் வாலாபாக் குருதி மாறியது!

இந்த நிகழ்வுக்கு முன்பு வரை நீதியும், நியாயமும் பிரிட்டிஷ் அரசினால் வழங்கப்படும் என மக்கள் நினைத்தார்கள். விடுதலை என்பது வழங்கப்படாது. நாம் தான் பிடுங்கிக் கொள்ள வேண்டும் எனும் நிலைப்பாட்டுக்கு தலைவர்கள் வந்தது அப்போது தான். அந்த நிகழ்வு தான் ஒத்துழையாமை இயக்கத்தின் திரியைப் பற்ற வைத்தது.

இந்த நிகழ்வு தான் பகத்சிங் எனும் விடுதலை வீரரை அந்த நிலத்துக்குச் சென்று இரத்தம் தோய்ந்த. மண்ணை எடுத்து சபதம் செய்ய வைத்தது! ஒரு பெரும் கானகத்தைப் பற்ற வைக்க ஏதோ ஒரு நெருப்புப் பொறி காரணமாய் இருப்பதுண்டு. இங்கே விடுதலை எனும் நெருப்பை தேசமெங்கும் பற்ற வைக்க இந்த படுகொலை அனலை அனுப்பி வைத்தது.

விடுதலை என்பது ஒரு அரசியல் முடிவல்ல, அது மனுக்குலத்தின் பிராணவாயு போல. மனித இறையாண்மையின் மையம் விடுதலையே. பேச்சுச் சுதந்திரம், சிந்தனைச்

சுதந்திரம், வழிபாட்டுச் சுதந்திரம், உணவுச் சுதந்திரம் என ஒவ்வொன்றிலும் ஒரு தனி நபருக்கு இருக்கின்ற சுதந்திரமே நம் தேசம் உண்மையான சுதந்திரத்தோடு இருக்கிறதா என்பதை உறுதி செய்கிறது. இந்தச் சுதந்திரங்களையெல்லாம் தடை செய்யும் நாடு, தனது எதிர்காலத்தையே தடை செய்கிறது!

நமக்கான விடுதலை இன்று முழுமையாய் இருக்கிறதா? இல்லை துப்பாக்கிக் குண்டுகளுக்குப் பதிலாய் சித்தாந்தம் துளைக்கும் ஜாலியன் வாலாபாக் கள் இன்றும் தொடர்ந்து கொண்டு தான் இருக்கிறதா?

சிறுபான்மையினருக்கு வழிபாட்டு உரிமைகள் இருக்கின்றவா? இல்லை அவர்கள் குறி வைத்துத் தாக்கப்படுகின்றனரா?

விளிம்பு நிலை மக்கள் தங்களுடைய உரிமைகளைப் பெற்றுக் கொள்கிறார்களா? அல்லது அவர்களுடைய குரல்கள் அதிகார பூட்ஸ் கால்களால் நசுக்கப்படுகிறதா?

ஊடகங்கள் சுதந்திரமாய் இயங்குகின்றனவா? அல்லது அவை ஆதிக்கத்தின் கைப்பாவையாய் விஷத்தைப் பந்தி வைத்து, சுயநலமாய் இருக்கின்றனவா?

மக்கள் அச்சமின்றி வாழ்கிறார்களா? அல்லது அரசியல் லாபங்களுக்காக அவர்களுடைய நிம்மதி வாழ்க்கை சூறையாடப்படுகிறதா?

இது போன்ற கேள்விகளே நாம் எப்படிப்பட்ட சூழலில் இருக்கிறோம் என்பதை நமக்கு விளக்கும். எவற்றையெல்லாம் எதிர்த்து நாம் குரல் கொடுக்க வேண்டும் எனும் தெளிவையும் நமக்கு நல்கும். ஜனநாயகம் துப்பாக்கிக் குண்டுகளின் சத்தத்தினால் மட்டுமல்ல, அதிகாரத்தின் மௌனத்தினாலும் படுகொலைக்கு ஆளாகும்!


ஜாலியன் வாலாபாக் நமக்கு உணர்த்தும் அடிப்படைச் செய்தி இது தான். எங்கே அதிகாரம் அராஜகமாய் மாறுகிறதோ, எங்கே அதிகாரம் மக்களை விட்டு விலகி நிற்கிறதோ அங்கே மக்கள் அவதிக்குள்ளாகிறார்கள், அழிவுக்குள்ளாகிறார்கள். அதிகாரத்தின் வெற்றி ஆட்டிப் படைப்பதில் அல்ல, அரவணைத்துச் செல்வதில் தான்.

எல்லோருக்குமான அதிகாரம், ஆட்சி என்பதே உண்மையான மக்களாட்சி. சிறுபான்மையினரின் பாதுகாப்பு, விமர்சனங்களை ஏற்கும் பக்குவம், வெளிப்படையான பேச்சுவார்த்தை, வேற்றுமையில் ஒற்றுமை என அனைத்தும் அமைந்த ஒரு தேசமே கனவு தேசம்.

கிறிஸ்தவர்களாகிய நமக்கு நம் தேசத்தின் நலனில் அக்கறை இருக்க வேண்டும். செபிப்பதும், தியானிப்பதும் மட்டுமல்ல! ஒடுக்கப்பட்டோருக்காய் குரல் கொடுப்பதும், ஏழைகளின் சார்பாய் நிற்க வேண்டியதும் நமது கடமையாகும். இதையே இறைமகன் இயேசுவின் வாழ்விலிருந்து கற்றுக் கொள்கிறோம்.

இயேசு அதிகாரத்தின் பக்கமாகவோ, மத அடக்குமுறையின் பக்கமாகவோ நின்றதே இல்லை. ஒதுக்கப்பட்டவர்களுக்கான குரலாய் வாழ்ந்தார். அப்படிப்பட்ட ஒரு வாழ்க்கையை வாழவே நாம் முயல வேண்டும்.

ஜாலியன் வாலாபாக் எங்கோ என்றோ




நடந்த ஒன்றல்ல. மணிப்பூர்களில் அப்பாவிகள் படுகொலை செய்யப்படுவதும் ஜாலியன் வாலாபாக்கின் நீட்சியே. நியாயத்தின் குரல்வளை நெரிக்கப்படுவதும் ஜாலியன் வாலாபாக்கின் நீட்சியே.

வரலாற்றை மக்களிடம் எடுத்துச் செல்வோம். உண்மையான ஒரு அன்பின் தேசம் கட்டியெழுப்ப நம் தார்மீகக் கடமைகளைத் தவறாமல் செய்வோம்.

# வானியல் தகவல்களை தீவிரமாக அணுகுவோம்

சிகரம் **செபா**

வானியல் தகவல்களை தீவிரமாக அணுகுவோம் 1950 மார்ச் 23ஆம் நாள் உலக வானிலை ஐக்கிய நாடுகள் அவையால் உருவாக்கப்பட்டது. 1951 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 23ஆம் ஆண்டு உலக வானிலை நாளாக கொண்டாடப்பட்டு வருகிறது வானிலை மற்றும் காலநிலை பற்றிய விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்தவும் சமூக பாதுகாப்புக்கு வானிலை ஆய்வு மற்றும் அறிவிப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தவும் இந்நாள் கொண்டாடப்படுகிறது.

## 2025 மையக்கருத்து

உலக வானிலை தினம் ஒவ்வொரு ஆண்டும் ஒரு சிறந்த செயல்பாட்டுக்கான மையக்கருத்தோடு கொண்டாடப்பட்டு வருகிறது. 2025 ஆம் ஆண்டு வானிலை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுக்கு இடையேயான இடைவெளியை ஒன்றிணைத்து குறைத்தல் என்கிற மையச் சிந்தனையில் உலக மாநில தினம் கொண்டாடபடப்பட்டது காலநிலை மாற்றத்தால் ஏற்படும் தீவிர வானிலை நிகழ்வான பெருவெள்ளம், புயல், வறட்சி போன்றவற்றிலிருந்து முன்கூட்டியே பாதுகாக்கக் கூடிய வழிமுறைகளை உருவாக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.

## 2026 மையக் கருத்து

2026 ஆம் ஆண்டு உலக மாநில தினம் இன்றைய சரியான கவனிப்பு நாளை பாதுகாப்பு என்கிற மையக்கருத்தில் கொண்டாடப்படுகிறது. இன்றைய வானிலை மற்றும் காலநிலை மாற்றம் பற்றிய சரியாக உற்று கவனித்தால் தான் நாளைய சமூகத்தை பாதுகாக்க முடியும். பூமி வெப்பமயமாதல் அதனால் ஏற்படும் காலநிலை மாற்றம், மற்ற இயற்கை பேரிடர்கள் பற்றிய அறிவியல் பூர்வமான



புரிதல் தேவைப்படுகிறது. தீவிர வானிலை நிகழ்வுகள் மற்றும் காலநிலை நெருக்கடி போன்றவற்றை எதிர்கொள்ள மக்கள் தயாரிக்கப்பட வேண்டும்.

## வானிலை மற்றும் காலநிலை

வானிலை என்பது ஒன்று அல்லது இரண்டு நாட்களில் நடைபெறும் மழை, குளிர், வெப்பம், காற்று வீசுதல் போன்ற நிகழ்வுகளைக் குறைக்கிறது. காலநிலை என்பது ஒரு குறிப்பிட்ட பகுதியில் ஏறக்குறைய 30 ஆண்டுகள் நடைபெறும் மாநில நிகழ்வுகளின் சராசரியை குறிக்கிறது. மாநில என்பது ஒரு குறிப்பிட்ட பூமி கோழை பகுதியில் இருக்கும் வெப்பநிலை காற்றழுத்தம்

மற்றும் ஈரப்பதம் ஆகியவற்றில் ஏற்பட்ட மாறுபாடுகளைக் கண்காணித்து மழை, புயல், வெள்ளம், குளிர் வெப்பம், வறட்சி போன்ற நிகழ்வுகளை முன்கூட்டியே கணிக்கும் அறிவியல் செயற்கைக்கோள் பேரிடர்கள் மற்றும் பலூன்களை பயன்படுத்தி வானிலை தரவுகள் சேகரிக்கப்படுகின்றன. வானிலை தரவுகளை சேகரித்து தருவதற்காக பல்வேறு பொறியியல் தொழில்நுட்பங்களும் பயன்படுத்தப்படுகின்றன. வானிலே தகவல்களை மக்களிடம் கொண்டு சேர்ப்பதில் ஊடகங்களும் பெரும்பங்கு வகிக்கின்றன. தொடர்ந்து நிகழும் தீவிர வானிலை நிகழ்வுகளை கண்காணித்து காலநிலை பற்றிய தகவல்கள் சேகரிக்கப்படுகின்றன. தொழிற் புரட்சிக்கு பிறகு காலநிலை படிப்படியாக மாற்றத்துக்கு உட்பட்ட அண்மை ஆண்டுகள் காலநிலை நெருக்கடி என்கிற நிலைக்கு வந்திருப்பதாக சூழல் மற்றும் அறிவியல் ஆய்வாளர்கள் எச்சரிக்கிறார்கள்.

## வானிலை அறிவிப்பின் முக்கியத்தும்

வானிலை தகவல்களை சரியாக சேகரிப்பதும் அதை மக்களிடம் கொண்டு செல்வதும் மிக முக்கியமாக பணிகளாக கருதப்படுகிறது. குறிப்பாக விவசாயம் மற்றும் உணவு உற்பத்தி சார்ந்த பணிகளை திட்டமிடவும் நீர் பாசனம் மற்றும் அறுவடை பணிகளை திட்டமிடவும், விமான போக்குவரத்து, சாலை போக்குவரத்து, கப்பல் போக்குவரத்து போன்றவற்றை திட்டமிட வானிலை அறிவிப்புகள் மற்றும் முன்னெச்சரிக்கைகள் பேருதவியாக இருக்கின்றன. கடலோடிகள் மற்றும் கடலோரம் வாழ்பவர்கள் வானில் சார்ந்த இயக்க வேண்டி இருக்கிறது எனவே மாநில தகவல்களை துல்லியமாக சேகரிப்பதோடு அதை மக்களிடம் உடனடியாக கொண்டு சேர்க்க வேண்டும். நவீன தொழில் நுட்பங்களை இதற்கு பயன்படுத்த வேண்டும்.

## காலநிலை மாற்றம் மற்றும் நெருக்கடி

உலகம் முழுவதும் தீவிரம் மற்றும் அதிதீவிர மாநில நிகழ்வுகள் பெருகி வருவது காலநிலை நெருக்கடி ஏற்பட்டது இருப்பதை முன்னறிவிக்கிறது. குளிர் அலைகள், பனிப்புயல்கள், வெப்ப அலைகள், பெருமலை மற்றும் பெருவெள்ளம், பெரும் புயல்கள் பெரும் வறட்சி, காட்டு தீ, நிலச்சரிவு, பருவமழை பெய்து போவது போன்றவற்றை பேரிடர்கள் அதிகரித்து வருகின்றன. 2025 ஆம் ஆண்டில் உலக அளவில் 200க்கும் மேற்பட்ட இயற்கை பேரிடர்கள் நிகழ்ந்துள்ளன. மேற்கூறிய இயற்கை பேரிடர்களால் 87.8 பில்லியன் மக்கள் பாதிப்புக்கு உள்ளானதோடு 17 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் இறந்திருக்கிறார்கள்.

## இந்தியாவும் காலநிலை மாற்றமும்

இந்தியா காலநிலை பாதிப்புக்கு உள்ளாகி இருக்கிற நாடுகளில் ஒன்பதாவது இடத்தில் இருக்கிறது. 100 கோடிக்கும் மேற்பட்ட இந்தியர்கள் காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பேரிடர்களால் பெரும் பாதிப்புகள் ஏற்படும் இடங்களில் வசிப்பதாக கூறப்படுகிறது. கடந்த காலங்களில் பேரிடர்களால் இந்தியா பேரிழப்புகளை சந்தித்துள்ளது. வருங்காலத்தில் காலநிலை மாற்றம் இந்தியாவில் விவசாய மற்றும் உணவு உற்பத்தியில் பெரும் பாதிப்பு ஏற்படுத்தும் என கணிக்கப்படுகிறது தீவிர மாநில நிகழ்வுகள் காலநிலை நெருக்கடியை முன்னறிவிக்கின்றன. காலநிலை நெருக்கடி பூமி வெப்பமாதலால் ஏற்படுகிறது. பசுமை சூழல் வாயுகளை வெளியேற்றுவதால் பூமி வெப்பம் ஆகிறது. எனவே, மாநில தகவல்களை தீவிரமாக அணுகி பேரிடர்கள் ஏற்படுவதை தடுக்கவும் பேரிடர்களின்போது தங்களைக் காத்துக் கொள்ளவும் மக்கள் முன் வர வேண்டும் மாநில ஆய்வுகள் மற்றும் காலநிலை நெருக்கடிக்கு தீர்வு போன்றவற்றுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்

# நீர் வளம்

## இன்றைய தேவை, நாளைய வாழ்வு

பவுல் இல்லத்திலிருந்து...

அருட்சகோதர் **வி. யேசுராசு**
இரண்டாமாண்டு இறையியல்

மனித வாழ்வின் மிக அடிப்படை தேவைகளில் இன்றியமையாதது நீர். உணவு இல்லாமல் கூட மனிதனால் வாழ்ந்திட முடியும் ஆனால் நீர் இல்லாமல் மனிதனால் வாழ முடியாது. எனவே தான் நீரின் முக்கியத்துவத்தை உணர்ந்த திருவள்ளுவர் வான் சிறப்பு என்னும் அதிகாரத்தில் இருபதாவது குறளில், "**நீரின்றி அமையாது உலகு**" என்று கூறுவார். உலகில் உள்ள அனைத்து உயிர்களும் நீரைச் சார்ந்தே வாழ்கின்றன. எனவே நீர் என்பது வெறும் இயற்கை வளமல்ல. அது மனித வாழ்வின் அடித்தளம் ஆகும். இன்றைய உலகில் மக்கள் தொகை அதிகரித்து வரும் சூழ்நிலை, தொழில் மயமாக்கல், சுற்றுச்சூழல் மாசு போன்ற காரணங்களால் நீர் பற்றாக்குறை பெரும் சவாலாக மாறியுள்ளது. ஆகவே "**நீர் வளம் இன்றைய தேவை, நாளைய வாழ்வு**" என்ற கருத்து மிக முக்கியமானதாகிறது.



நீர் என்பது இறைவன் மனிதனுக்குக் கொடுத்த மாபெரும் கொடை என்று விவிலியம் எடுத்துரைக்கிறது. படைப்பின் தொடக்கத்தில் "**நீர் திரளின் மீது கடவுளின் ஆவி அசைவாடிக் கொண்டிருந்தது**" (தொ.நூ1:2) என்று விவிலியம் நமக்கு கூறுகிறது. எனவே இந்த இறைவார்த்தையில் இருந்து படைப்பின் தொடக்கமே நீரோடு தொடர்புடையது என்பதை நமக்கு தெளிவு படுத்துகிறது. மேலும் திருப்பாடலின் ஆசிரியர் தனது நூலில் இவ்வாறாக கூறுவார், "**பசும்புல் வெளிமீது என்னை அவர் இளைப்பாறச் செய்வார்; அமைதியான நீர்நிலைகளுக்கு எனை அழைத்துச் செல்வார்**" (தி.பா23:2). இந்த இறை வார்த்தைப் பகுதி மனிதனுக்கு வாழ்வையும் அமைதியையும் அளிக்கும் கடவுளின் உன்னதமான கொடை என்பதை நினைவூட்டுகின்றன. எனவே நீரை பாதுகாப்பது இயற்கையை பாதுகாப்பதோடு மட்டுமல்லாமல் கடவுளின் படைப்பை மதிக்கும் ஆன்மீக பொறுப்பும் நமக்கு வழங்கப்பட்டுள்ளது.

நீரின் முக்கியத்துவத்தை உணர்ந்த அறிஞர்களும் இதைத்தான் வலியுறுத்து கின்றனர். இந்தியாவின் முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் இவ்வாறாக கூறுவார், "**21ஆம் நூற்றாண்டின் மிகப் பெரிய சவால்களில் ஒன்று நீர் மேலாண்மை**". உலக வங்கி மற்றும் ஐக்கிய நாடுகள் அமைப்பும் எதிர்காலத்தில் பல

நாடுகள் கடுமையான நீர் பற்றாக்குறையைச் சந்திக்க நேரிடும் என்று எச்சரிக்கின்றன. உலகில் உள்ள நீரின் பெரும்பகுதி கடல் நீராக இருப்பதால் குடிநீராக பயன்படக்கூடிய நீர் மிகவும் குறைவாக உள்ளது. இந்த நிலைமை கடவுள் நமக்கு கொடையாக தந்த நீரையும், இயற்கை நமக்கு வழங்கி இருக்கின்ற கொடையாகிய நீரை மனிதன் சிக்கனமாகப் பயன்படுத்தவும், புதிய நீர் மேலாண்மை முறைகளை உருவாக்கவும் தூண்டுகிறது.

நீர் என்பது உடல் வாழ்விற்கு மட்டுமல்ல; மாறாக ஆன்மீக வாழ்விற்கும் அடையாளமாக விளங்குகின்றது. இதைத்தான் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து யோவான் எழுதிய நற்செய்தி 4ம் அதிகாரம் 14வது இறைவார்த்தையில் இவ்வாறு கூறுவார், "நான் கொடுக்கும் தண்ணீரை குடிக்கும் எவருக்கும்



என்றுமே தாகம் எடுக்காது. நான் கொடுக்கும் தண்ணீர் அதைக் குடிப்பவருக்குள் பொங்கி எழும் ஊற்றாக மாறி நிலைவாழ்வு அளிக்கும்". இங்கு இயேசு கூறும் நீர் என்பது நிலை வாழ்வு அளிக்கும் அருளைக் குறித்துக் காட்டுகிறது. கிறிஸ்தவர்களாகிய நமக்கு திருமுழுக்கும் கூட தண்ணீரால் வழங்கப்படுகிறது. எனவேதான் தண்ணீர் என்பது புது பிறப்பு, புது வாழ்வின் அடையாளமாகப் பார்க்கப்படுகிறது. இந்த இறையியல் உண்மை, இயற்கை வளங்களை பொறுப்புடன் காக்கும் பணிக்கு மனிதர்களாகிய நம்மை அழைக்கிறது.

சமூகக் கோணத்தில் பார்க்கும்போது, நீர் பற்றாக்குறை பல்வேறு பிரச்சினைகளை உருவாக்குகிறது. குடிநீர் இல்லாமை காரணமாக மக்கள் இடம்பெயர்வதும், விவசாயம் பாதிக்கப்படுவதும், வறுமை அதிகரிப்பதும் நடைபெறுகின்றன. பல கிராமங்களில் பெண்கள் மற்றும் குழந்தைகள் தினமும் பல கிலோமீட்டர் தூரம் நடந்து தண்ணீர் எடுத்து வர வேண்டிய நிலை உள்ளது. இது கல்வி, ஆரோக்கியம் மற்றும் சமூக முன்னேற்றத்தையும் பாதிக்கிறது. ஆகவே நீர் மேலாண்மை என்பது வெறும் சுற்றுச்சூழல் பிரச்சினை மட்டுமல்ல அது ஒரு சமூக நீதி பிரச்சினையும் ஆகும். இந்த சூழலில் நாம் அனைவரும் நீரை பாதுகாக்கும் பொறுப்பை ஏற்க வேண்டும். மழைநீர் சேகரிப்பு, நீர் வீணாவதைத் தடுக்கும் பழக்கம், ஆறுகள் மற்றும் குளங்களை பாதுகாப்பது போன்ற நடவடிக்கைகள் அவசியம். விவசாயத்தில் துளி பாசனம் போன்ற புதிய முறைகள் பயன்படுத்தப்பட வேண்டும். மேலும் பள்ளிகள், தேவாலயங்கள், சமூக அமைப்புகள் ஆகியவை நீர் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். இவை அனைத்தும் இணைந்தால் தான் நீர் வளத்தை நிலைநிறுத்த முடியும்.

நிறைவாக, நீர் என்பது இன்று வாழ்வதற்கான தேவையாக மட்டுமல்ல நாளைய தலைமுறையின் வாழ்வையும் தீர்மானிக்கும் முக்கிய வளமாகும். நீரைப் பாதுகாப்பது மனிதனின் பொறுப்பும் கடமையும் ஆகும். கடவுளின் படைப்பை மதிக்கும் மனப்பாங்குடன் நாம் நீரைச் சிக்கனமாக பயன்படுத்தி பாதுகாத்தால் மட்டுமே எதிர்கால தலைமுறைக்கு வளமான உலகை வழங்க முடியும். எனவே நாம் அனைவரும் ஒன்றிணைந்து "**நீரைக் காப்போம் – வாழ்வைக் காப்போம்**" என்ற எண்ணத்துடன் செயல்பட வேண்டும்.

# பணிக்குழுக்களின் சிறப்பு செயல்பாட்டு அறிக்கைகள்
## குழித்துறை மறைமாவட்டம்

### கிறிஸ்தவ வாழ்வு பணிக்குழு

*மறைக்கல்வி பணிக்குழு*

**ஆசிரியர்களுக்கான தவக்கால தியானம்**

- 21.02.2026 புத்தன்கடை மறைவட்ட அளவில் புனித அகுஸ்தினார் ஆலயம் குலசேகரத்தில் நடைபெற்றது. 30 மன்றங்களிலிருந்து 250 ஆசிரியர்கள் பங்கேற்றனர். அருள்பணி பெஞ்சமின் தியான உரை வழங்கினார்கள்.

**பள்ளி மறைக்கல்வி, நன்னெறி ஆண்டுவிழா**

- 23.02.2026 அன்னை ஆதா பயிற்சி மையம் அழகியமண்டபத்தில் நடைபெற்றது. 66 பள்ளிகளிலிருந்து 415 பேர் பங்கேற்றனர். வாழ்த்துரைகள், கலைநிகழ்வுகள், சிறப்புத் தேர்வில் 70% மேல் மதிப்பெண் பெற்ற மாணாக்கருக்கு பரிசளிப்பு ஆகியவை இடம்பெற்றது.

*திருவழிபாட்டுப் பணிக்குழு*

**மறைவட்ட அளவில் பயிற்சி**

- 22.02.2026 காரங்காடு மறைவட்ட உறுப்பினர்களுக்குப் பயிற்சி புனித சவேரியார் ஆலயம், தச்சன்பரம்பில் நடைபெற்றது. பொருள் உள்ள முறையில் அருளின் காலத்திற்கு தயாராக என்ற தலைப்பில் அருள்பணி காட்வின் பயிற்சியளித்தார்கள். 70 பேர் பங்கேற்றனர்.

### விவிலியப் பணிக்குழு

*மறைவட்ட பொதுக்குழு*

- 07.02.2026 மாத்திரவிளை மறைவட்டப் பொதுக்குழு மறைவட்ட அலுவலகம் துண்டத்துவிளையில் நடைபெற்றது. 19 பேர் பங்கேற்றனர்.

### 2. சிறார் பணிக்குழு

- புத்தன்கடை, வேங்கோடு, காரங்காடு மறைவட்ட வழிகாட்டிகளுக்கான சிறப்பு பயிற்சி சிறார்களை வழிநடத்தும் முறை, குழந்தைகளை வளர்க்கும் முறை, உதவும் கரங்கள் நம்பிக்கையின் இதயங்கள் ஆகிய தலைப்பில் நடைபெற்றது. 198 பேர் பங்கேற்றனர்.
- மறைமாவட்ட கருத்தாளர்களுக்கான பயிற்சி 27.02.2026 டிரினிட்டி மேய்ப்பு பணி மையத்தில் நடைபெற்றது. உதவும் கரங்கள் நம்பிக்கையின் இதயங்கள் என்ற தலைப்பில் நடைபெற்றது. 27 பேர் பங்கேற்றனர்.

### 3. இளைஞர் பணிக்குழு

*மறைவட்டபொதுக்குழு*

| நாள் | மறைவட்டம் | கருத்தமர்வு | எண் |
|---|---|---|---|
| 15.02.2026 | முளகுமூடு | இயக்கம் ஏன் தேவை? இயக்கத்தினால் கிடைக்கும் நன்மைகள் | 35 |
| 15.02.2026 | திரித்துவபுரம் | தேர்வை எதிர் கொள்வது எப்படி? | 30 |
| 15.02.2026 | புத்தன்கடை | நல்ல பழக்கவழக்கங்கள் | 25 |
| 15.02.2026 | காரங்காடு | தேர்வை எதிர் கொள்வது எப்படி? | 27 |
| 15.02.2026 | வேங்கோடு | கல்வி | 17 |
| 15.02.2026 | மாத்திரவிளை | பெண்கள் தின வரலாறு, கூட்டம் நடத்தும் முறை | 9 |

## இளம் கிறிஸ்தவ மாணவர் இயக்கம்

*மறைவட்ட பொதுக்குழு*

| நாள் | மறைவட்டம் | கருத்தமர்வு | எண் |
|---|---|---|---|
| 15.02.2026 | முளகுமூடு | பெண் விடுதலை | 35 |
| 08.02.2026 | திரித்துவபுரம் | தேர்தலும் நமது கடமைகளும் | 25 |
| 15.02.2026 | புத்தன்கடை | சர்வதேச அரசியல் | 20 |
| 15.02.2026 | காரங்காடு | இளைஞர்களின் மத்தியில் அன்பின் வெளிப்பாடு | 14 |
| 08.02.2026 | வேங்கோடு | இளைஞர் இயக்க கூட்டம் எவ்வாறு நடத்த வேண்டும் | 21 |
| 15.02.2026 | மாத்திரவிளை | பெண்கள் தின வரலாறு | 22 |

*இணைந்த செயல்பாடுகள்*

- 15.02.2026 அன்று வேங்கோடு வட்டார வழிகாட்டிகள் பயிற்சி மறை மாவட்டம் சார்பாக நடத்தப்பட்டது. இதில் 36 இளைஞர் இயக்க மற்றும் இ.கி.மா வழிகாட்டிகள் கலந்து கொண்டனர் அருட்தந்தை பபியான்ஸ் அவர்கள் இயக்க நோக்கம் பற்றி கருத்துரை வழங்கினார்கள்.
- மறைமாவட்ட இளைஞர் பணிக்குழு நடத்திய தவக்கால சிறப்பு தியான நிகழ்வானது 22.02.26 ஞாயிற்றுக்கிழமை முளகுமூடு புனித மரியன்னை பசிலிக்காவில் நடைபெற்றது. அருட்பணி. செபாஸ்டின் அவர்கள் "இளைஞர் இயேசு என்னில் உருவாக" என்ற தலைப்பில் கருத்துரை வழங்கினார்கள் அதைத்தொடர்ந்து சிலுவை பாதை நிகழ்வு நடைபெற்றது. மொத்தம் 325 மாணவ மாணவிகள் மற்றும் இளைஞர்கள் கலந்து கொண்டார்கள்.

## 4. தொழிலாளர் பணிக்குழு

- முளகுமூடு, திரித்துவபுரம், மாத்திரவிளை, காரங்காடு ஆகிய மறைவட்டங்களில் பொதுக்குழுக்கள் நடைபெற்றது. 105 பேர் பங்கேற்றனர்.
- 15.02.2026 மறைமாவட்ட அளவில் பொதுக்குழு உறுப்பினர்களுக்கு இயக்க நோக்கம் மற்றும் தலைமைத்துவம் பற்றி பயிற்சி நடைபெற்றது. 77 பேர் பங்கேற்றனர்.

## 5. சமூகத்தொடர்பு பணிக்குழு

- அன்றாட அருள்வாக்கு, இறை ஒளியில் நிறைவாழ்வு, புனிதர் வரலாறு, தவக்கால சிந்தனைகள் பற்றிய Poster மற்றும் கத்தோலிக்க பாடல்கள் தயாரித்து தினமும் whatsapp குழுவில் பகிரப்படுகின்றது.

## 6. பெண்கள் பணிக்குழு

- புத்தன்கடை, முளகுமூடு, திரித்துவபுரம், வேங்கோடு ஆகிய மறைவட்டங்களில் பொதுக்குழுக்கள் நடைபெற்றது. 108 பேர் பங்கேற்றனர். காரங்காடு மறைவட்ட அளவில் பொங்கல் விழா பாளையத்தில் நடைபெற்றது. 57 பேர் பங்கேற்றனர்.
- மாத்திரவினை மறைவட்ட மாநாடு 25.02.2026 துண்டத்துவிளையில் வைத்து அரசியல் சாசன உரிமைகளும், பெண்களும் என்ற தலைப்பில் நடைபெற்றது. 127 பேர் பங்கேற்றனர்.

## 7. குடும்பநலம் பணிக்குழு

- திருமண பதிவு செய்தவர்கள் : 46 பேர்
- திருமண பயிற்சி முடித்தவர்கள் : 261 பேர்

- குடும்ப ஆற்றுப்படுத்தலுக்காக வந்த தம்பதிகள் : 06

## 8. சிறை பணிக்குழு

- 22.02.2026 மணலி பங்கு மறைக்கல்வி மாணாக்கருக்கு குற்றமில்லா குமரி குறித்து விழிப்புணர்வு பயிற்சி வழங்கப்பட்டது. 102 பேர் பங்கேற்றனர்.
- 27.02.2026 அன்று மேய்ப்பு பணி மையத்தில் வைத்து மறைமாவட்ட பொதுக்குழு நடைபெற்றது. 14 பேர் பங்கேற்றனர்.

## 9. அன்பிய பணிக்குழு

- 14.02.2026 அன்று குழித்துறை மறைமாவட்ட அன்பியப் பணிக்குழுவின் சிறப்பு கருத்தரங்கு "**நிறை வாழ்வை நோக்கி அன்பிய பயணம்**" என்ற சிந்தனையில் புனித சவேரியார் கத்தோலிக்க பொறியியல் கல்லூரியில் நடைபெற்றது. மேதகு ஆயர் ஆல்பர்ட் அனஸ்தாஸ் அவஏகள் "**நிறைவாழ்வை நோக்கி அன்பியம்**" என்னும் சிந்தனையில் தலைமையுரையும், மார்த்தாண்டம் மறை மாவட்ட மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் அவஏகள் "**அன்பியத்தில் மறுமலர்ச்சி**" என்னும் சிந்தனையிலும், பேரருட்பணி M.C ராஜன் அவர்கள் "**அரசியல் விழிப்புணர்வு**" என்னும் சிந்தனையிலும் திரு குமரி ஆதவன் அவர்கள் "**குடும்பம் நேற்றும் இன்றும்**" என்னும் சிந்தனையிலும் கருத்துரைகள் இடம்பெற்றன. சுமார் 475 நபர்கள் பங்கேற்றனர்
- முளகுமூடு, காரங்காடு, மாத்திரவிளை, வேங்கோடு, புத்தன்கடை, திரித்துவபுரம் ஆகிய மறைவட்டங்களில் பொதுக் குழுக்கள் நடைபெற்றது. 352 பேர் பங்கேற்றனர்
- முளகுமூடு, திரித்துவபுரம் ஆகிய மறைவட்டங்களில் தவக்கால தியானம் சுட்ன்கடை பொன்மலையில் நடைபெற்றது 163 பேர் பங்கேற்றனர்

***நல உதவி***

- கல்விக்காக, முதியோர் பராமரிப்புக்காக, திருமணத்திற்காக, மருத்துவ செலவிற்காக பங்கு, ஒருங்கிணையம் சார்பாக ரூ. 17, 44, 960.00 வழங்கப்பட்டது.

## 10. பட்டியலினத்தார் பணிக்குழு

- புத்தன்கடை, முளகுமூடு ஆகிய மறைவட்டங்களில் பொதுக்குழுக்கள் நடைபெற்றது. புற்றுநோய் விழிப்புணர்வு பற்றி பயிற்சி வழங்கப்பட்டது. 27 பேர் பங்கேற்றனர்.
- புற்றுநோய் விழிப்புணர்வு பேரணி 04.02.2026 முளகுமூடு மரியன்னை பசிலிக்காவில் நடைபெற்றது. 65 பேர் பங்கேற்றனர்.

11. நற்செய்தி பணிக்குழு

- 28.02.2026 பணிக்குழு உறுப்பினர் களுக்கான 10 செபக் கருத்துகளை மையப்படுத்தி தவக்கால திருப்பயணம் நடத்தப்பட்டது.

## 12. புதுவசந்தம் மற்றும் உளநலம் பணிக்குழு

- மது நோயாளர் முகாம், மதுநோயாளர்களுக்கான இரண்டு நாள் சிறப்பு பயிற்சி, ஆற்றுபடுத்தல் குழுவின் ஒரு நாள் பயிற்சி மற்றும் புதுவசந்தம், வளர்பிறை, விடிவெள்ளி யுயு குழுக்களின் ஆண்டு விழாக்கள் கொண்டாடப்பட்டன.

## 13. நலவாழ்வு பணிக்குழு

- மருத்துவ முகாம்கள், புற்றுநோய் பரிசோதனை முகாம், மருத்துவ அட்டை வழங்கும் நிகழ்வுகள் நடைபெற்றன.

அருள்பணி. **நீ. மார்ட்டின்,**
பணிக்குழுக்களின் ஒருங்கிணைப்பாளர்.

# Engagements of the Bishop: March 2026

| Date | Event | Place | Time |
|---|---|---|---|
| 01 | Feast Mass | Aralvaimozhi | 05.30 am |
| 02 | Commission Coordination Meeting | Pastoral Centre | 03.00 pm |
| 03 | Curia | Bishop's House | 09.30 am |
| 04 | KIDSS Board Meeting | Unnamalaikadai | 03.00 pm |
| 05 | Morning Star College Annual Day | Chunkankadai | 10.00 am |
| 09 | Consult | Bishop's House | 09.30 am |
| 10 | Commissions' seminar | Pastoral Center | 09.00 am |
| 13 | Nanjil College Annual day | Kaliyakkavilai | 09.30 am |
| 15 | Pastoral Visit | Palliyadi | 06.30 am |
| 16 | Nanjil College Board meeting | Kaliyakkavilai | 04.00 pm |
| 17- 19 | Priests' Live – in | Vizhinjam | |
| 20 | Holy Mass | Vellarada | 06.00 pm |
| 21 | Finance Committee meeting | Bishop's House | 03.00 pm |
| 22 | Vincent De Paul Retreat Mass | Madathattuvilai | 12.30 pm |
| | DPC | Unnamalaikadai | 03.00 pm |
| 23 | Annai Velankanni College Annual Day | Tholayavattam | 10.00 am |
| 24 | Senate | Bishop's House | 09.30 am |
| 25 | Holy Mass – Annual Day Celebration of CLC | Puthukkadai | 11.00 am |
| 27 | Convocation of Nanjil College | Kaliyakkavilai | 09.00 am |
| 29 | Palm Sunday Mass at Cathedral | Thirithuvapuram | 07.30 am |
| | Holy Mass | Chunkankadai | 03.00 pm |
| 30 | Chrism Mass | Thirithuvapuram | 05.30 pm |

Reg. No : 0740

# GM

## YOGA & NATUROPATHY CLINIC

Gnanamony Memorial Life Care Clinic

## ஞானமணி நினைவு

யோகா மற்றும்
இயற்கை மருத்துவமனை
திருவட்டார்

**Dr.BRINDHA BNYS**

94427 11782

- யோகா சிகிச்சை
- உணவு சிகிச்சை
- எடை இழப்பு திட்டம்
- அனைத்து வயதினருக்கும் வழக்கமான யோகா வகுப்புகள்
- மூலிகை மருந்துகள்
- ஓசோன் சிகிச்சை
- அக்கு பஞ்சர்
- அக்கு பிரஷர்
- பிசியோ தெரபி
- நீர் சிகிட்சை
- நீராவி குளியல்

**SPECIAL TREATMENT FOR LADIES**


MASSAGE


ACUPUNCTURE


PHYSIOTHERAPY


STEAM BATH


HYDROTHERAPY


ACUPRESSURE

OTHER TREATMENTS












Date of Publishing : **20-03-2026**
Puthia Thedal Registered with Register of News Paper of India
Reged No. TNTAM/2010/35944 KKI/92/**2023 - 2025** Poster on 19th & 20th of every month at Mulagumoodu Post Office


# Mar Ephraem
## College of Engineering and Technology

(Run by Catholic Diocese of Marthandam)
Elavuvilai - 629171, Marthandam, Kanniyakumari, Tamilnadu.



### COURSES OFFERED

**UG PROGRAMMES**
- B.E. - Civil Engineering
- B.E. - Mechanical Engineering
- B.E. - Computer Science & Engineering
- B.E. - Electrical & Electronics Engineering
- B.E. - Electronics & Communication Engineering
- B.Tech. - Artificial Intelligence & Data Science

**PG PROGRAMMES**
- M.E. - Applied Electronics
- M.E. - Computer Science & Engineering
- M.E. - Manufacturing Engineering
- Master of Business Administration (MBA)

**RESEARCH PROGRAMMES**
- Ph.D. - Computer Science & Engineering
- Ph.D. - Mechanical Engineering

ACIC Incubation Forum
MSME Host Institution
DST Funded Research Projects
NSTEDB NewGen IEDC

### Why Mar Ephraem?

- NBA accredition for CSE and Mechanical
- Value added courses to fill the industry institute gap
- Engineering Skill training
- Survey Camp
- Innovation projects in Robotics
- International Placement
- Anna University Nodal Centre
- Student participation in National events like SAE SUPRA, m-BAJA, SAEISS E-Bike and Drone competitions.
- University winners in Sports
- Students projects through DST funds
- Southern Railway Consultancy works by students.
- 55+ National and International MoUs.




/marephraem.edu.in
Admission Helpline : +91 944 244 8111, +91 999 460 6055


Edited & Published by **Rev. Fr. R. PAUL RICHARD JOSEPH** on behalf of Diocese of Kuzhithurai
Bishop's House, Unnamalaikadai, Marthandam, Post Box No. 1, Pin - 629 179.
Printed at **THEDAL PRESS, AZHAGIYAMANDABAM**